**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**

**பத்தாவது பாராளுமன்றத்தின்**

**முதலாம் கூட்டத்தொடர்**

# பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 488

## அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின்

## ஐந்தாம் அறிக்கை

(2024.03.19 தொடக்கம் 2024.05.09 வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர்
கௌரவ கபீர் ஹஷீம் அவர்களால்
2026 மார்ச்சு மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

*2026மார்ச்சு மாதம் 06 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் அச்சிடப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டது*

***<u>பாராளுமன்றத் தொடர் இலக்கம் 488</u>***

பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் தொடர்பான அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தல்;

பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

> *"அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கூற்றொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச்சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்."*

**<u>ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர்</u>**

**<u>அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அமைப்பு</u>**

**<u>(அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கட்டத்தில்)</u>**

1. கௌரவ லசந்த அலகியவன்ன, பா.உ. (தவிசாளர்)
2. கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்சன த சில்வா, பா.உ.
3. கௌரவ பிரசன்ன ரணவீர, பா.உ.
4. கௌரவ கே. காதர் மஸ்தான், பா.உ.
5. கௌரவ(திருமதி) டயனா கமகே,பா.உ.(2024.05.08 ஆம் திகதி வரை)
6. கௌரவ சாமர சம்பத் தசநாயக்க, பா.உ.
7. கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க, பா.உ.
8. கௌரவ வஜிர அபேவர்தன, பா.உ.
9. கௌரவ ஏ.எல்.எம் அதாஉல்லா, பா.உ.
10. கௌரவ ஜயரத்ன ஹேரத், பா.உ.(2024.03.20 ஆம் திகதி தொடக்க)
11. கௌரவ கபீர் ஹஷீம், பா.உ.
12. கௌரவ விமலவீர திசாநாயக்க , பா.உ.
13. கௌரவ நிரோஷன் பெரேரா, பா.உ.
14. கௌரவ ஜே.சீ அலவத்துவல, பா.உ.
15. கௌரவ அஸோக அபேசிங்ஹ, பா.உ.
16. கௌரவ ஜயந்த கெட்டகொட, பா.உ.
17. கௌரவ சிவஞானம் சிறீதரன், பா.உ.
18. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.
19. கௌரவ எம். உதயகுமார், பா.உ.
20. கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட, பா.உ.
21. கௌரவ கருணாதாச கொடிதுவக்கு, பா.உ.
22. கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி, பா.உ. (2024.03.20ஆம் திகதி தொடக்கம்)
23. கௌரவ இசுரு தொடங்கொட, பா.உ.
24. கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த, பா.உ.
25. கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி, பா.உ.

26. கௌரவ எம்.டபிளியூ.டீ சஹன் பிரதீப் விதான , பா.உ.
27. கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே , பா.உ.
28. கௌரவ டீ. வீரசிங்ஹ , பா.உ.
29. கௌரவ வீரசுமன வீரசிங்ஹ, பா.உ.
30. கௌரவ (திருமதி) மஞ்சுளா திசாநாயக்க , பா.உ.
31. கௌரவ (கலாநிதி) திருமதி ஹரினி அமரசூரிய, பா.உ.

## <u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்</u>

## <u>அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அமைப்பு</u>

1. கௌரவ கபீர் ஹஷீம், பா.உ. (தவிசாளர்)
2. கௌரவ எண்டன் ஜயகொடி, பா.உ.
3. கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர, பா.உ.
4. கௌரவ சுகத் திலகரத்ன, பா.உ.
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப், பா.உ. .
6. கௌரவ நலின் ஹேவகே, பா.உ.
7. கௌரவ அரவிந்த செனரத், பா.உ.
8. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க, பா.உ.
9. கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், பா.உ.
10. கௌரவ ரோஹித அபேகுணவர்தன, பா.உ.
11. கௌரவ ஜே.சீ. அலவத்துவல, பா.உ.
12. கௌரவ சாமர சம்பத் தசனாயக, பா.உ.
13. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.
14. கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன, பா.உ.
15. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன், பா.உ.
16. கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத, பா.உ.
17. கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, பா.உ.
18. கௌரவ கே.இளங்குமரன், பா.உ.
19. கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா, பா.உ.
20. கௌரவ அஜந்த கம்மெத்தெகே, பா.உ.
21. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி, பா.உ.
22. கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ, பா.உ.
23. கௌரவ ரீ.கே. ஜயசுந்தர, பா.உ.
24. கௌரவ எம். ஏ. எம். தாஹிர், பா.உ.
25. கௌரவ சுசந்த குமார நவரத்ன, பா.உ.
26. கௌரவ லால் பிரேமநாத், பா.உ.
27. கௌரவ சானக மாதுகொட, பா.உ.
28. கௌரவ சுனில் ரத்னசிரி, பா.உ.

29. கௌரவ சந்தன சூரியஆரச்சி, பா.உ.
30. கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன, பா.உ.

**குழு அலுவலகத்தின் தற்போதைய பணியாட்டொகுதி :**

- திரு. சனத் விஜேகுணவர்த்தன - குழுவின் செயலாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
- திருமதி. சமிலா ரூபசிங்க - பிரதான அலுவலர்
- திருமதி. ஆர்.ஏ.டீ.என்.கியோவனீ - பிரதிப் பிரதான அலுவலர்
- திரு.ஜே.ரீ.எல்.பீ.சமீர - உதவிப் பிரதான அலுவலர்
- செல்வி.ஜி.டீ.ஜே.எச்.அயேஷ்மந்தி - பாராளுமன்ற அலுவலர்
- திருமதி.ஜீ.எம். கல்லாகொட - பாராளுமன்ற அலுவலர்
- செல்வி எம். எல். ஏ.டி.எம் குமாரி - பாராளுமன்ற அலுவலர்

**குழு அறிக்கைகள்**

www.parliament.lk எனும் இணையதளத்திலிருந்து கீழ் காணும் வழித்தடத்தின் ஊடாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்:

Select language → Business of Parliament → Committees → Committee Reports → Select Legislature (10th Parliament) → Select Session (1st Session) → Select Committee Type (Committees for Special Purposes) → Select Committee → (Committee on Public Accounts) → Search

**உள்ளடக்கம்**

**பக்க இலக்கம்**

a. தலைவரின் குறிப்பு ........................................................... 09

b. சுருக்க அறிக்கை ........................................................... 11

c. விசேட அவதானிப்புகள் ........................................................... 15

d. ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனம் தொடர்பாகவும் அடையாளம் காணப்பட்ட முக்கிய சிக்கல்கள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் ........................................................... 16

e. இணைப்புகள் ........................................................... 117

f. சூசிகை. ........................................................... 134

## <u>*தலைவரின் குறிப்பு*</u>

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் போது 2024.03.19 முதல் 2024.05.09 வரை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை உள்ளடக்கிய குழுவின் ஐந்தாவது அறிக்கையை இத்தால் சமர்ப்பிக்கின்றேன். கணக்காய்வு என அறியப்படும் பிந்தியச் செயற்பாட்டில் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தீர்வுகளை வழங்குவதோடு வினைத்திறனின்மையை முனைப்புடன் தடுப்பது மிகவும் பயன்மிக்கதாக இருக்குமென்பதால் எதிர்காலத்தில் கடந்த கால குறைபாடுகளைத் தடுப்பதன் முகமாக நிறுவனங்களுக்கு வழிகாட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கூடுதல் கவனம் செலுத்துமென்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதன் பிரகாரம், இன்றளவில் அரச நிறுவனங்களை அழைத்து விசாரணை செய்வதற்கு நேர் ஒத்ததாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இணையவழி முகாமைத்துவ கட்டமைப்பின் ஊடாக சகல அரச நிறுவனங்களையும் வருடாந்தம் மதிப்பீடு செய்யும் செயற்பாடு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றதென்பதை குறிப்பிட விரும்புகின்றேன். இதன் மூலம் குழுவின் விசாரணைகளை சீரான இற்றைப்படுத்தல்களுடன் மேற்கொள்ள முடியுமென்பதோடு நிறுவனங்களில் காணப்படுகின்ற பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை அடையாளங்கண்டு சமகால கொள்கை ரீதியான தீர்மானங்கள் மூலம் அவற்றை சீராக்குவதன் பொருட்டு வழிகாட்டுவதற்கு வாய்ப்பேற்படும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

நிறுவனங்கள் மீதான விசாரணைகளின் போது அடையாளங் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகளை சரி செய்யவும் நிலவுகின்ற சாதகமான பண்புகள் மற்றும் போக்குகளை மேம்படுத்தவும் குழுவின் அமர்வுகளை வழிநடத்துகையில் அரச உத்தியோகத்தர்களின் கண்ணியத்தை காத்திடவும் வேண்டுமென்பது குழுவில் பணியாற்றியதன் மூலம் நான் பெற்ற நீண்ட அனுபவங்கள் எனக்கு உணர்த்துகின்றது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றி என்பது அதில் பங்கெடுக்கும் சகல பங்குதாரர் தரப்புகளினதும் ஒத்துழைப்பின் பெறுபேறாகும். ஆகவே, இக்குழுவின் சகல அங்கத்துவ உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி அரச நிதிப் பொறிமுறையை உரிய முறையில் செயற்படச் செய்தல் தொடர்பான பின்னூட்டல் செயற்பாட்டுக்கு எனக்களிக்கும் ஒத்துழைப்பினை நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், குழுவின் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு அளித்து வரும் ஒத்துழைப்புக்காக கணக்காய்வாளர் தலைமையதிபதி மற்றும் அவருடைய பணியாட்டொகுதிக்கும், திறைசேரியின் உத்தியோகத்தர்களுக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அலுவலகத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் குழு தமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றது என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கபீர் ஹஷீம்**
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

## சுருக்க அறிக்கை

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் விசாரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் (பி.க.அ.)/கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் (க.அ.) அளித்த விளக்கங்கள், குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் விதப்புரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2024.03.19 ஆம் திகதி தொடக்கம் 2024.05.09 ஆம் திகதி வரை விசாரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும்/ஏற்புடைய கணக்காய்வு அறிக்கைகளின் கால எல்லைகள்.**

| | **நிறுவனம்** | **பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையின் கால எல்லை /முன்னைய குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம் /நிகழ்கால செயலாற்றுகை** | **விசாரிக்கப்பட்ட திகதி** |
|---|---|---|---|
| 01 | சுகாதார அமைச்சு | அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல்கள் மற்றும் அது சார்ந்த விடயங்கள் குறித்த பிரச்சினைகளை புலனாய்வு செய்வதற்கான குழுவின் அறிக்கையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல். | 2024 மார்ச் 19 |
| 02 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தொடர்பில் 2020, 2021 மற்றும் 2022 ஆம் நிதியாண்டுகளுக்காக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் குடிவரவு | 2024 ஏப்ரல் 02 |

| | நிறுவனம் | பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையின் கால எல்லை /முன்னைய குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம் /நிகழ்கால செயலாற்றுகை | விசாரிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| | | குடியகல்வுத் திணைக்களத்தின் நிகழ்கால செயலாற்றுகையைப் பரீட்சித்தல். | |
| 03 | கல்வி அமைச்சு | தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் கட்டமைப்பின் (NEMIS) முன்னேற்றம், கல்வி அமைச்சின் 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மற்றும் நிகழ்கால செயலாற்றுகை. | 2024 ஏப்ரல் 24 |
| 04 | சுற்றுலாத்துறை அமைச்சு | 2020, 2021 மற்றும் 2022 ஆம் நிதியாண்டுகளை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறை அமைச்சு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் நிகழ்கால செயலாற்றுகையைப் பரீட்சித்தல். | 2024 மே 07 |
| 05 | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் பொதுதிறைசேரித் திணைக்களம். | கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள மரணச் சொத்து முகாமைத்துவம் குறித்த செயலாற்றுகை கணக்காய்வு அறிக்கையைப் பரீட்சித்தல். | 2024 மே 08 |

| | **நிறுவனம்** | **பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையின் கால எல்லை /முன்னைய குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம் /நிகழ்கால செயலாற்றுகை** | **விசாரிக்கப்பட்ட திகதி** |
|---|---|---|---|
| 06 | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு. | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு உள்ளிட்ட இலங்கை சுங்கம், உண்ணாட்டரசிறைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைமையில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டமிடல் குறித்த துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் பொருளாதார நெருக்கடியின் பாதிப்புக்களைத் தணிப்பது பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு ஆகியவை ஒன்றிணைந்து 2024.01.24 ஆம் திகதி குழுவின் மூலம் வழங்கப்பட்ட விதப்புரைகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல். | 2024 மே 09 |

## குழுவினால் நடாத்தப்பட்ட விஷேட விசாரணைகள்

| | **விஷேட விசாரணைகள்** | **விசாரிக்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 01. | பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபையின் நிகழ்கால செயலாற்றுகை தொடர்பான பரீட்சிப்பு. | 2024 மார்ச் 20 |
| 02. | சீ ஷெல்ஸ் தொடக்கம் தாய்லாந்து வரையில் பயணித்த பழுதடைந்த மீன்கள் அடங்கிய கொள்கலன்களைக் கொண்ட கப்பலை கொழும்புத் துறைமுகத்திலிருந்து நாட்டிற்குள் கொண்டுவந்தமை குறித்து கணக்காய்வு விசாரணையில் வெளியான தகவல்களைப் பரீட்சித்தல். | 2024 மார்ச் 20 |

## விசேட அவதானிப்புகள்

விசாரணை செய்யப்பட்ட காலப்பகுதியில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் மூலம் நிறுவனங்களுடன் தொடர்புடைய பின்வரும் பொதுவான பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டன.

- **உள்ளகக் கணக்காய்வு அலகுகள் காணப்படாமை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் காணப்படாமை.**
- **பணியாட்டொகுதி வெற்றிடங்கள்.**
- **முன்னைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் விதப்புரைகளுக்கு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பதிலளிக்காமை.**
- **அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய வருவாயை உரிய திகதியில் அறவிடுவதில் காணப்படும் தாமதம்.**
- **அரச நிதியை தவறாகப் பயன்படுத்துதல்.**
- **நிறுவனங்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இல்லாமை.**

**ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனம் தொடர்பாகவும் அடையாளம் காணப்பட்ட முக்கிய சிக்கல்கள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்**

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்<br>- குழுவின் அவதானிப்புகள்/ விதப்புரைகள்</th></tr>
<tr><td colspan="3">சுகாதார அமைச்சு<br>(அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின், சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல்கள் மற்றும் அது சார்ந்த விடயங்கள் குறித்த பிரச்சினைகளை விசாரணை செய்வதற்கான குழுவினது அறிக்கையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.)<br>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 மார்ச் 19</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -<br>❖ சுகாதார அமைச்சு<br>❖ தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை<br>❖ அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்</td></tr>
<tr><td>01</td><td><u>உப குழுவின் மூலம் முன்மொழியப்பட்ட விதப்புரைகளை கருத்திற்கொண்டு இலத்திரனியல் பெறுகை முறையை (e-procurement system) 2024 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் நிறைவு செய்ய நடவடிக்கை எடுத்தல்.</u></td><td>இது தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியவற்றுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு அவர்களுக்குத் தேவையான தரவுகள் வழங்கப்பட்ட போதிலும் இதன் தற்போதைய முன்னேற்றம் தொடர்பில் சுகாதார அமைச்சின் தரப்பில் திருப்திகொள்ள முடியாதென்பதாக சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார்.<br><br>இப்பெறுகைச் செயன்முறையின் சில பகுதிகளை 2024.03.31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்வதற்கும் 2024.12.31 ஆம் திகதிக்குள் அமைப்பின் நடவடிக்கைகளை நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு</td></tr>
</table>

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்<br>- குழுவின் அவதானிப்புகள்/ விதப்புரைகள் |
|---|---|---|
| | | மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அலுவலர்கள் தெரிவித்தனர். எனினும் உலக வங்கியின் நிதியுதவியின் அடிப்படையில் தொடர்புடைய நிறுவனத்துடன் காணப்பட்ட ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து புதியதொரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நேரிட்டதாகவும் 2024.08.31 ஆம் திகதிக்குள் இக்குழு வழங்கிய விதப்புரையுடன் தொடர்பில் தேசிய போட்டித்தன்மையின் அடிப்படையிலான விலைமனுக்கோரல் (National Competitive Bidding) மற்றும் சர்வதேச போட்டித்தன்மையின் அடிப்படையிலான விலைமனுக்கோரல் (International Competitive Bidding) பகுதியை தயாரித்து நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அலுவலர்கள் மேலும் தெரிவித்தனர்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் மூலம் இலத்திரனியல் பெறுகை முறை தயாரிக்கப்படும் வரை, கணக்காய்வுப் பிரிவினால் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளை பின்பற்றுமாறு சுகாதார அமைச்சின் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்<br>- குழுவின் அவதானிப்புகள்/ விதப்புரைகள் |
|---|---|---|
| | | பி.க.அ/க.அ இற்கு பரிந்துரை செய்யப்பட்டது.<br><br>இலத்திரனியல் பெறுகை முறை (e-procurement system) தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியவற்றுடன் கலந்துரையாடி அந்த வழிமுறைகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கின்ற குறிப்பிட்ட காலப்பகுதியை உள்ளடக்கிய அறிக்கையை 2024 ஏப்ரல் 02 ஆம் திகதிக்கு முன் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ/ க.அ இற்கு குழு பரிந்துரை செய்தது. |
| 02 | **<u>சுவஸ்த மென்பொருள் முறைமையை நடைமுறைப்படுத்துதல்.</u>** | சுகாதார அமைச்சில் உள்ள சுவஸ்த மென்பொருள் முறைமை தொடர்பில் குழு அவதானம் செலுத்தியது. இதன்போது முன்பு காணப்பட்ட முறைமையின் மூலம் அனைத்து மருத்துவமனைகள் தொடர்பான தரவுகளையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதாகவும் புதிய சுவஸ்த முறைமையின் மூலம் இந்தத் தரவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்ததோடு 2024ஆம் ஆண்டில் இந்த முறைமைக்கூடாக மருந்துகளின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**<br>**- குழுவின் அவதானிப்புகள்/ விதப்புரைகள்** |
|---|---|---|
| | | நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள மருத்துவமனைகளில் காணப்படும் மருந்துகளின் அளவு, அவற்றின் கையிருப்பு முடிவடையும் காலம் போன்ற விடயங்களை இம்முறைமையின் ஊடாக பரீட்சிக்கும் விதம் தெளிவுபடுத்தப்பட்டது.<br><br>பொருள் இருப்புக் கட்டளை நிலைமை தொடர்பில் நாடு பூராகவும் அமைந்துள்ள சகல மருத்துவமனைகளிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக குழு வினவியதோடு அதன்போது 1161 மருத்துவமனைகளும் 361 சுகாதார மருத்துவ அலுவலர் காரியாலயங்களும் தற்போது சுவஸ்த முறைமைக்குள் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார். அத்தோடு மனித வளங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் குறித்த தகவல்களையும் இம்முறைமைக்குள் சேர்க்க முடியும் எனவும் சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார். |
| 03 | <u>**மருந்துக் கட்டளைகளின் அச்சுப் பிரதிகள் கிடைக்கும் வரை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் பெறுகைச் செயன்முறையை ஆரம்பிக்காமை.**</u> | முன்னர் காணப்பட்ட மென்பொருள் முறைமைக்கூடாக மருந்துகளுக்கான கட்டளைகளை மேற்கொள்ளும் போது தொடர்புடைய ஏனைய ஆவணங்கள் காண்பிக்கப்படவில்லை என்பதால் அச்சுப் பிரதிகள் கிடைக்கும் வரை பெறுகைச் செயன்முறையை ஆரம்பிக்க முடியாதென அரச |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்<br>- குழுவின் அவதானிப்புகள்/ விதப்புரைகள் |
|---|---|---|
| | | மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| 04 | **சுவஸ்த முறைமையை சாய்சாலை மற்றும் நோயாளர் வரை நடைமுறைப்படுத்த முடியாமை** | நோயாளர் வரையில் மருந்துகளை விநியோகிப்பது குறித்த தரவுகளை சுவஸ்த முறைமைக்குள் உள்ளிடுதலானது, மருந்துக் கையிருப்பு முகாமைத்துவத்திற்கு அவசியப்படுவதில்லை என இதன்போது சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார். அதில் இந்தச் செயன்முறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு வருடாந்தம் செலவு செய்ய எதிர்பார்க்கும் செலவினம் மிக அதிகம் எனவும், அது இலங்கை போன்ற நாட்டிற்கு சுமக்க வேண்டியேற்படுகின்ற கூடுதலான தொகையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். |
| 05 | **நோயாளிகளின் பதிவுகள் மற்றும் கிளினிக் பணிகளுக்காக சுவஸ்த மென்பொருள் முறைமையை விரிவுபடுத்துதல்.** | பூகோள நிதியத்தின் மூலம் இதற்கென தனியான முறையியலை நிறுவுவதற்கான உடன்பாட்டிற்கு வந்திருப்பதாகவும் எதிர்பார்த்த நிதி கிடைத்த பிறகு 30 மருத்துவமனைகளில் இலத்திரனியல் நோயாளர் பதிவு முறையியலை (Electronic Patient Record System) 2025 ஜுன் மாதத்திற்குள் தயாரித்து முடிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார்.<br><br>மேற்குறிப்பிட்ட 30 மருத்துவமனைகளுக்கு மேலதிகமாக |

| | | |
|---|---|---|
| | | தற்போது நாடு முழுவதிலும் உள்ள சுமார் 90 மருத்துவமனைகளில் இலத்திரனியல் தகவல் முறைமை இயங்கி வருவதாகவும் அவ்வனைத்து முறைமைகளையும் வலையமைப்பு முறையில் செயற்படுத்துவதற்கு பூகோள நிதிய உதவியின் மூலம் ஒருங்கிணைந்த முறையியலைத் தயாரிப்பதற்கு உதவி வழங்குவதால் நாட்டின் பிரதான மருத்துவமனைகள் அனைத்தினையும் உள்ளடக்கிய வகையில் இலத்திரனியல் நோயாளர் பதிவுகளை பேணும் முறையியலை உருவாக்க முடியும் என்பதாக சுகாதார அமைச்சின் பி.க.அ மேலும் தெரிவித்தார். |
| 06 | **கறுப்புப்பட்டியலிடப்பட்டுள்ள மருத்துவ வழங்கல்களை மேற்கொண்ட கம்பனிகள்/ நிறுவனங்களை மீண்டும் மருத்துவ வழங்கல்களை மேற்கொள்வதிலிருந்து தடுப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளல்.** | சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கறுப்புப்பட்டியலிடப்பட்டுள்ள வழங்குநர்கள் குறித்த தகவல்களை அமைச்சு எழுத்துமூலம் கோரியுள்ளதாக சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்ததோடு வழங்குநர்களை கறுப்புப்பட்டியலில் இடப்பட்டமை தொடர்பான அளவுகோல்களைத் தயாரிப்பது தொடர்பில் தேசிய பெறுகை ஆணைக்குழு மற்றும் பொதுத் திறைசேரி அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதிலும் கருப்புப்பட்டியலில் இடப்பட்டுள்ளமை தொடர்பில் தற்போதைக்கு நிலையான வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்படவில்லை எனவும் அவ்வழிகாட்டல்களை தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ மேலும் தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| | | **அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>தரமற்ற மருத்துவப் பொருட்களை வழங்கிய கம்பனிகள் / நிறுவனங்களை கறுப்புப்பட்டியலில் இட்டாலும் வேறு பெயர்களில் தோன்றி மீண்டும் மருத்துவப் பொருட்களை வழங்குவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இலத்திரனியல் பெறுகை முறைமை குறித்த கலந்துரையாடலின் போது தரமற்ற மருத்துவப் பொருட்களை வழங்கிய கம்பனிகள் / நிறுவனங்களை கறுப்புப்பட்டியலில் இடும் முறையியலை தேசிய பெறுகை ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் பி.க.அ. இற்கு குழு பரிந்துரை வழங்கியது. |
| 07 | **அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் சுகாதார சேவைகள் திணைக்களத்தை மீள ஸ்தாபித்தல்.** | இது தொடர்பில் அமைச்சில் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டதாகவும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவுடனும் இதன் சட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் இன்னும் சில வாரங்களில் அமைச்சரவை நிரூபத்தை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார்.<br><br>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>பொருத்தமான கலந்துரையாடல்களை மேற்கொண்டு சுகாதார சேவைகள் திணைக்களத்தை மீள ஸ்தாபிப்பது குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக குழுவிற்கு 2024 மே மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறு சுகாதார அமைச்சின் பி.க.அ இற்கு குழு பரிந்துரை வழங்கியது. |

| | | |
|---|---|---|
| 08 | **பெறுகை நடவடிக்கைகளுக்கு நீண்டகாலம் எடுப்பதை தடுப்பதற்கு சுகாதார அமைச்சுக்குள் தனியான பெறுகைப் பிரிவொன்றைத் தாபித்தல் மற்றும் தாமத்திற்கு காரணமான அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.** | இலத்திரனியல் பெறுகை முறைமையை (e-procurement system) நடைமுறைப்படுத்துவதன் மூலம் மருத்துவ வழங்கல்களின் தாமதத்தை குறைத்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளதாக இதன்போது சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்ததோடு குழுவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட நடவடிக்கைகளைப் பின்பற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் தற்போது கூட்டுத்தாபன அலுவலர்களின் பயன்பாட்டிற்காக பெறுகைக் கையேட்டை தயாரித்துள்ளதாகவும், ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைக்கும் எடுக்கும் நேரம் நிர்ணயம் செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலத்தில் அதை குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாகவும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார். |
| 09 | **தற்போது சுகாதார அமைச்சின் மூலம் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணப் பட்டியல்களின் பெறுமதி குறித்து நிதி, பொருளாதார உறுப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றிடம் உள்ள தரவுகளில் முரண்பாடு காணப்படுதல்.** | பெறுகை நடைமுறையை முறைப்படுத்துவதன் மூலம் இதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் பெறுகை நடைமுறைக்குத் தனியானதொரு பிரிவை (Procurement Dvision) நிறுவியதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார்.<br><br>மருந்துகளின் பெறுகை நடவடிக்கைகளுக்குச் செலவாகும் காலத்தை குறைத்துக்கொள்வதற்கு பெறுகை ஆணைக்குழுவின் மூலம் |

| | | |
|---|---|---|
| | பெறுகை நடவடிக்கைகளுக்காக நீண்டகாலம் எடுத்ததன் காரணத்தினால் இந்நிலைமை உருப்பெற்றிருப்பதை குழு கண்காணித்தது. | புதிய வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். |
| 10 | **சுகாதார அமைச்சின் வருடத்துடன் தொடர்புடைய 2024 பெறுகைத் திட்டத்தைச் சமர்ப்பித்தல்.** | சுகதார அமைச்சுக்கு 2024ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கான பெறுகைத் திட்டம் இதுவரை பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என குழு முன்னிலையில் தெரியவந்தது.<br><br>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கான பெறுகைத் திட்டம் உரிய காலக்கெடுவுக்குள் வழங்கப்பட வேண்டும் என்ற சட்டத் தேவை இருப்பதால், 2024ஆம் ஆண்டிற்கான சுகதார அமைச்சின் பெறுகைத் திட்டத்தை உடனடியாகத் தயாரித்து ஒரு மாதத்திற்குள் அத்திட்டத்தின் பிரதியை குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகதார அமைச்சின் பி.க.அ இற்கு குழு பரிந்துரை செய்தது. |
| 11 | **அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வழங்கல் தாமதங்களைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு செலுத்தப்படும் 10% சேவைக் கட்டணத்தில் அதிக கட்டணத்தை அறிவிடுதல்.** | அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தனது கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களின் கட்டுப்பாடற்ற காலதாமதங்களுக்காக இந்த அறவிடுதலிலிருந்து விடுவிக்குமாறு குழுவிடம் கோரிக்கை விடுத்தார். அத்துடன் சுகாதார அமைச்சுக்கு மேற்கொள்ளப்படும் வழங்கல்களுக்கு உரிய காலத்தில் பணம் கிடைக்காததால் தமது நிறுவனம் 20 பில்லியன் ரூபா வங்கி மேலதிகப் பற்றினை பெற்றுள்ளதாகவும் இவ்வங்கி மேலதிகப் பற்றிற்குரிய வட்டியை அரச மருந்தகக் |

| | | |
|---|---|---|
| | | கூட்டுத்தாபனம் செலுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 2008ஆம் ஆண்டு தொடக்கம் செலுத்தாமல் விட்டதன் மூலம் சேர்ந்து வந்த சுமார் 34 பில்லியன் ரூபா தொகையை செலுத்துவதற்கு தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல் அடையாளம் காணப்பட்டு வருவதாகவும், அதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும், இங்கு குறிப்பிடப்பட்டதோடு, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 2024 மார்ச் மாதத்தின் துவக்கப்பகுதி வரையில் தற்போதைய வழங்குநர்களுக்கு கொடுப்பனவுகளை செய்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. |
| 12 | **<u>2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் முக்கிய விடயங்களுக்குப் புறம்பான விடயங்களுக்கு பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்குவதை நிறுத்துதல்.</u>** | இங்கு மருந்துகளை பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்கும் முறையியலுக்கு தொடர் இலக்கத்தை அறிமுகப்படுத்தல், பாதுகாப்பு முத்திரையைப் பயன்படுத்துதல், தொடர்புடைய சான்றிதழை விண்ணப்பதாரிக்கு/ இறக்குமதியாளருக்கு நேரடியாக வழங்குவதை உடன் நிறுத்தி அந்தப் பொறுப்பை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஆணையாளரிடம் ஒப்படைத்தல் மற்றும் மருந்துகளை விடுவிப்பதற்கு முன் அச்சான்றிதழின் துல்லியத்தன்மையை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் இணையதளத்தின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஆணையாளருக்கு அறிவுறுத்தல்களை |

| | | |
|---|---|---|
| | | வழங்குதல் போன்ற முறையியல்களை அறிமுகப்படுத்துதல், அத்தியாவசியமான நிலைமைகளின் போது அப்பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்குவதை பொறுப்புவாய்ந்த குழுவொன்றின் அங்கீகாரத்துடன் மேற்கொள்வதற்கு புதிய முறையியலை அறிமுகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை விரைவில் பின்பற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதி, இது தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை இதுவரையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்தார். |
| 13 | **புதிய மருந்தைப் பதிவு செய்வதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள 300 நாள் கால அவகாசத்தை மீளாய்வுசெய்து குறுகிய காலத்தில் மருந்துகளைப் பதிவுசெய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல் மற்றும் ஒரே மருந்தை பல்வேறு வியாபார நாமங்களின் கீழ் பதிவுசெய்தலை வரையறைக்குட்படுத்தல் வேண்டும் என்பது.** | தற்போது பதிவுகளை புதுப்பிக்க முடியாமல் போன மருந்துகளுக்கான பதிவு காலத்தை தற்காலிகமாக நீடிப்பதற்கும் இது தொடர்பான பதிவு நடவடிக்கைகள் மற்றும் புதிய மருந்துப் பதிவுகளை உடனடியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிகாரசபைக்குத் தேவையான புதிய பணியாட்டொகுதியை இணைத்துக்கொண்டதன் பின்னர் மருந்துகளை பதிவுசெய்யும் காலத்தை மேலும் குறைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.<br><br>அத்தோடு புதிய மருந்துகளை பதியும் நடவடிக்கைகளும் ஒரேநேரத்தில் மேற்கொள்ளப்படுவதோடு 5 வர்த்தக நாமங்களுக்கு குறைவாகக் காணப்படும் மருந்துகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் |

| | | |
|---|---|---|
| | | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார். |
| 14 | **<u>மருத்துவ வழங்கல் பட்டியலை மீளாய்வு செய்யும் குழுவை உரியநேரத்தில் கூட்டுதல் வேண்டும் என்பதோடு அக்குழுவின் பரிந்துரையின்றி எவ்வித மருத்துவ வழங்கல்களையும் கொள்வனவு செய்யக்கூடாது எனவும், மற்றும் வருட இறுதியில் உரிய குழுவின் அறிக்கையை வெளியிடுவதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பை தயாரிக்க வேண்டும் என்பது.</u>** | 2022 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட “மருத்துவ வழங்கல் பட்டியலை மீளாய்வு செய்யும் குழு” மருந்துகள் தொடர்பில் 2 ஆண்டுகளுக்கு ஒரு தடவையும் அறுவைச் சிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்கள் தொடர்பில் 3 ஆண்டுகளுக்கு ஒரு தடவையும் ஒன்றுகூடி மீளாய்வினை மேற்கொள்வதாகவும் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்ட அனைத்து துறைகளையும் சேர்ந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்களின் அளவை வரையறைக்குட்படுத்தியதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார்.<br><br>இதன்போது உரிய மீளாய்வுகளை மேற்கொள்ளும் காலத்தை மேலும் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் குழு வினவியது.<br><br>நடைமுறை ரீதியான காரணங்கள் நிமித்தம் இம்மீளாய்வுக் காலத்தை குறைப்பதற்கான சாத்தியம் இல்லையெனவும் பி.க.அ குழுவிற்கு தெரிவித்தார். |
| 15 | **<u>மருத்துவ வழங்கல் செயல்முறையை முகாமை செய்வதற்கு கையிருப்பு முகாமைத்துவம் குறித்து</u>** | கையிருப்பு முகாமைத்துவம் குறித்து தொழில் ரீதியான தகைமையுள்ள நபர்களின் சேவைகளைப் பெறுவதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | **தொழில் ரீதியான தகைமையுள்ள நபர்களின் சேவைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு கையிருப்பு முகாமைத்துவம் குறித்து முறையான பயிற்சியையும் இற்றைப்படுத்திய அறிவையும் வழங்குவதற்கான முறையியலை சுகாதார அமைச்சின் மூலமாக தயாரித்தல்.** | மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு கையிருப்புக் கட்டுப்பாட்டு மருத்துவ வழங்கல்கள் மற்றும் துறைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் மருந்தாளர்களுக்கு 2024 ஆகஸ்ட் தொடக்கம் செப்டம்பர் வரையில் கையிருப்பு கட்டுப்பாடு குறித்த பயிற்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தொழில் ரீதியான தகைமைகளைக் கொண்ட அலுவலர்களின் உதவிகளைப் பெற்று உரிய அலுவலர்களுக்கு முறையான பயிற்சியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ குழுவின் முன்பாக தெரிவித்தார். |
| 16 | **தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் ஆய்வுகூட வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.** | இதற்காக சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான பல கட்டிடங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடம் ஒப்படைப்பதற்கு தற்போது அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார். இதன் மூலம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டிடங்களைப் பயன்படுத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ஆய்வுகூடத்தை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>இந்தச் செயற்பாட்டிற்குத் தேவையான ஆலோசனைப் பணிகளுக்காக உலக சுகாதார தாபனத்தின் (WHO) குழுவொன்று ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக அவர் மேலும் தெரிவித்ததோடு அளவீட்டுப் பிரிவு கட்டிடத்தை ஆய்வுசெய்ததன் பின்னர் |

| | | |
|---|---|---|
| | | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அலுவலர்கள் அவ்விடமானது ஆய்வுகூடம் அமைப்பதற்குப் பொருத்தமற்ற இடமென அறிவித்ததாக குழுவிற்குத் தெரிவித்தனர். |
| 17 | **<u>ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் மருந்து மற்றும் சிகிச்சைக் குழுவை (Drug and Therapeutics Committee) நடத்துதல்</u>**<br><br>கிடைக்கக்கூடிய மருந்துகளின் அளவு, மருந்துப் பற்றாக்குறை மற்றும் மருந்துகளின் அதிகப்படியான அளவு மற்றும் மருந்துப் பயன்பாட்டினால் ஏற்படும் சிக்கல்கள் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு மாதாந்தம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டிருப்பினும் 380 நிறுவனங்களில் 139 நிறுவனங்கள் மட்டுமே அறிக்கைகளை அனுப்பியுள்ளதாக குழு முன் தெரியவந்தது. | முக்கிய மருத்துவமனைகளில் நடத்தப்படும் இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் கலந்து கொள்வார் என்றும் இந்த அறிக்கையை வழங்கியவர்கள் மற்றும் வழங்காதவர்களின் பட்டியல் 2 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படுகின்ற பணிப்பாளர்களின் கூட்டத்தில் காண்பிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.<br><br>**<u>அவதானிப்புகள்/விதப்புரைகள்</u>**<br><br>மருத்துவமனைகளில் உள்ள மருந்துப் பற்றாக்குறையைக் கண்டறிந்து முன்கூட்டியே மருந்துகளை கட்டளை செய்து எதிர்கால மருந்துத் தேவைகளைத் துல்லியமாகக் கண்டறிய தரவு கட்டமைப்புகளைப் பயன்படுத்தி மருத்துவமனைகளால் செய்யப்படும் உள்ளூர் கொள்முதல் குறைக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியது. |
| 18 | **<u>மருத்துவமனைகளில் பற்றாக்குறையான, அதிகப்படியாகவுள்ள மற்றும் குறைபயன்பாட்டு மருத்துவ உபகரணங்களைப் பற்றி ஒரு கணினிமயமாக்கப்பட்ட தரவு அமைப்பை உருவாக்குதல் மற்றும் தேவைக்கேற்ப மருத்துவ உபகரணங்களை மருத்துவமனைகளுக்கு இடையில் மாற்றுதல் மற்றும்</u>** | தற்போது, மருத்துவ உபகரணங்களில் இலத்திரனியல் தரவுக் கட்டமைப்பு சில மட்டங்களில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், மருத்துவமனைகளில் உள்ள முக்கியமான மருத்துவ உபகரணங்களின் தரவுகள் சுகாதார அமைச்சிடம் காணப்படுவதாகவும் சுமார் 25000 அளவிலான பிற முக்கிய உபகரணங்களின் தரவுக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் |

| | | |
|---|---|---|
| | **முன்னுரிமைப் பட்டியலின் (Priority List) அடிப்படையில் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவு ஊடாக தொடர்புடைய பதிவுகளைப் பராமரித்தல்** | சுகாதார அமைச்சின் பி.க.அலுவலர் தெரிவித்தார்.<br><br>அத்துடன், இந்த உத்தேச பணிகளுக்கு சுகாதார அமைச்சுக்குத் தேவையான ஒதுக்கீடுகள் குறைவாக இருப்பது குறித்து குழுவிடம் தெரிவித்த அவர் இதன் காரணமாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவிடம் முன்வைத்து முன்னுரிமை ஒழுங்கின்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>மேலும், உயிரியல் மருத்துவப் பொறியியல் பிரிவில் குறைந்த எண்ணிக்கையிலான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் இருப்பதால், இப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதில் சிரமம் இருப்பதாகவும் இங்கு அமைச்சின் அலுவலர்கள் சுட்டிக்காட்டியதோடு கடந்த ஆண்டுகளில் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை என்றும் அதற்காக ரூ. 60 பில்லியன் தேவைப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அலுவலர் மேலும் தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| 19 | **நாட்டில் உள்ள மருத்துவமனைகளை வகைப்படுத்தி மருத்துவமனையின் வகைக்கு ஏற்ப தேவையான மருத்துவ உபகரணங்களுக்கான பொதுவான விபரக்குறிப்புகள் அடங்கிய சுற்றறிக்கையை உயிரியல் மருத்துவப் பொறியியல்/ஆய்வுகூட** | இது தொடர்பில் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் பி.க.அலுவலர் தெரிவித்தார். நாட்டில் தற்போது மருத்துவமனைகளில் வகைப்படுத்தல்கள் உள்ளதால், அந்த வகைப்படுத்தல்களின்படி அந்தந்த மருத்துவமனைகளில் இருக்க வேண்டிய மருத்துவ உபகரணங்கள் |

| | | |
|---|---|---|
| | **சேவைப் பிரிவின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் இதன் முன்னேற்றம் குறித்த அறிக்கையை 2023.12.31 ஆம் திகதியாகும் போது குழுவிற்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.** | குறித்து விஷேட வைத்திய நிபுணர்களுடன் கலந்தாலோசித்து அமைச்சின் மூலம் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, சில மாதங்களில், தேவையான சுற்றறிக்கை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அலுவலர் மேலும் தெரிவித்தார். |
| 20 | **மருந்துகளை முறையான அமைப்பில் தேவையான வெப்பநிலை அளவுகளில் களஞ்சியப்படுத்தாததன் காரணமாக மருந்துகளின் தரம் வீழ்ச்சியடைவதால், மருந்து தரநிலைகளை ஆய்வு செய்யும்போது பயன்படுத்துவதற்காக, மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திர மாதிரிகள் மற்றும் பெற்றுக்கொள்ளும் மாதிரிகள், இந்தத் தொகைகளை மருத்துவமனைகளுக்கு வழங்கி பயன்படுத்தி முடியும் வரையில் உரிய தரங்களுக்கு அமைவாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.** | மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு போதிய களஞ்சிய வசதிகள் இன்மையால் பல மருந்துக் களஞ்சியங்கள் தற்போது சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்த சுகாதார அமைச்சின் அலுவலர்கள் தற்போது மாதிரிகள் களஞ்சியப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அந்த மருந்துகள் உகந்த வெப்பநிலையில் இருப்பதாக உத்தரவாதம் அளிக்க முடியாது என்றும் எதிர்காலத்தில் மாதிரிகளுக்கான களஞ்சியம் ஒன்றை நிறுவுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.<br><br>தரத்தில் மோசமான மருந்துகள் பரிந்துரைக்கப்பட்ட வெப்பநிலை அளவுகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படாததால், தரத்தில் மோசமான மருந்துகளுக்கான சேதங்களை அறவிட்டுக்கொள்வது தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில் இது பாதகமான விளைவை ஏற்படுத்துகிறது என்று குழு சுட்டிக்காட்டியது.<br><br>தற்போது உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான வேயங்கொடை களஞ்சியசாலையை சுகாதார அமைச்சுக்கு பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு |

| | | |
|---|---|---|
| | | வருவதாக சுகாதார அமைச்சின் அலுவலர்கள் தெரிவித்தனர். |
| 21 | **முக்கியமான மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பராமரிப்பு மற்றும் சேவை ஒப்பந்தங்கள், அத்தியாவசிய மருத்துவப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்களின் செயலிழப்புகள் மற்றும் திருத்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை உயிரியல் மருத்துவப் பொறியியல் பிரிவிற்கு நிகழ்நிலை தரவுக் கட்டமைப்பு மூலம் அறிக்கையிடுதல்.** | உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவைப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் சுமார் 548 பராமரிப்புப் பணிகள் Microsoft excel ஆவணமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.<br><br>கடந்த காலத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக மருத்துவமனைகளில் காணப்பட்ட முக்கியமான மருத்துவ உபகரணங்களுக்கான சேவை ஒப்பந்தங்கள் (Service Agreements) கைச்சாத்திடப்படவில்லை எனவும், இந்த ஆண்டில் ரூ. 4 பில்லியன் நிதி ஒதுக்கீடுகள் கிடைத்ததைத் தொடர்ந்து இந்த சேவை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ/க.அ தெரிவித்தார். |
| 22 | **அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து கட்டளைகளினதும் முன்னேற்றம் குறித்த சரிபார்ப்புப் பட்டியலைத் (Check list) தயாரித்து, அதை மருத்துவ வழங்கல் பணிப்பாளரினதும் பிரதிப் பணிப்பாளரினதும் தினசரி மேற்பார்வைக்கு உட்படுத்துதல்.** | சுவஸ்த கட்டமைப்பு மூலம் நிகழ்நிலை முறையியலுக்கூடாக கட்டளைகளின் முன்னேற்றத்தை எந்த நேரத்திலும் பரீட்சிக்ககலாம் என்றும், வாரத்திற்கு ஒருமுறை சுகாதார செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து முன்னேற்றம் தொடர்பான பரீட்சிப்பினை மேற்கொள்வதாகவும் அதற்கு மேலதிகமாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினாலும் வாரத்திற்கு ஒரு தடவை பின்னாய்வு (re-view) மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் அலுவலர்கள் குழுவின் முன்பாக தெரிவித்தனர். |

| | | |
|---|---|---|
| | | இது தவிர, நிறுவனங்கள் மற்றும் நோயாளிகளினூடாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பான பரிசோதனைகள் சுவஸ்த முறைமையின் ஊடாக மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். |
| 23 | **அனைத்து அவசரக் கொள்வனவுகளின் போதும் தொடர்புடைய கோப்பில் சேர்ப்பதற்காக மாதிரிப் படிவம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு அதில் மருந்துகள் தொடர்பான தகவல்கள் மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் கட்டளைகளின் முன்னேற்றம், கையிருப்பு பெறப்படும் திகதிகள், கையிருப்பு வழங்குவதில் உள்ள தாமதம் மற்றும் அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் பற்றிய தகவல்களைக் கொண்டிரூத்தல் வேண்டும்.** | அவசரக் கொள்வனவானது தற்போது சுகாதார அமைச்சின் மூலம் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகளுக்காக மாதிரிப் படிவம் காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் பி.க.அ தெரிவித்தார்.<br><br>மருத்துவமனை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகளுக்கு படிவத்தில் இந்த விடயங்களைச் சேர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குழு விதப்புரை செய்தது. |

**பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டம் மற்றும் கொழும்பு மாநகர சபையின் தற்போதைய செயலாற்றுகை பற்றிய ஆய்வு**

**விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 மார்ச் 20**

**அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**

- அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு
- வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
- இலங்கை புகையிரதத் திணைக்களம்
- மேல்மாகாண சபை
- கொழும்பு மாநகர சபை

| | | |
|---|---|---|
| 01 | **பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் திட்டமிடலை இற்றைப்படுத்துதல்.** | • 1896 இல் திட்டமிடப்பட்ட கொழும்பு கழிவுநீர் அகற்றல் கட்டமைப்புத் திட்டத்தின் நிர்மாணம் 1906 இல் ஆரம்பிக்கப்பட்டதாகவும்,<br>• தற்போது அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் அகற்றல் கட்டமைப்பில் சுமார் 90% அளவான பணிகள் 1925 ஆம் ஆண்டளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததாகவும்,<br>• 1972 ஆம் ஆண்டில் இந்தக் கருத்திட்டத்திற்காக அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட பிரதான திட்டத்தின் (Master Plan) அடிப்படையில் 1980 களில் இந்தக் கட்டமைப்பில் மேம்படுத்தல்கள் செய்யப்பட்டதாகவும்,<br>• 1990 களில் இந்தப் பிரதான திட்டம் இற்றைப்படுத்தப்பட்டதாகவும்,<br>கொழும்பு மாநகர சபையின் க.அ. தெரிவித்தார்.<br>அரசாங்கத்தினால் 1999-2000 ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு கழிவுநீர் அகற்றல் கட்டமைப்பிற்காக (Colombo Sewerage System) தர மதிப்பீடொன்று (Condition Assessment) மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரியவந்ததுடன் அந்தத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடியதாகவும் அதன்படி |

| | | |
|---|---|---|
| | | பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு 110 அமெரிக்க டொலர் மில்லியன் (அ.டொ.மி) கடன் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் குழுவின் முன் தெரியவந்தது.<br>• பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் Greater Colombo Wastewater Management Project (GCWMP) மற்றும் பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் என்றவாறு Greater Colombo Water & Wastewater Management Improvement Investment Project (GCWWMIIP) 02 கருத்திட்டங்கள் காணப்படுவதாகவும்,<br>• பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தில் 80 அமெரிக்க டொலர் மில்லியன் மற்றும்19.1 அமெரிக்க டொலர் மில்லியன் என 02 கடன்கள் (Loans) காணப்படுவதாகவும்,<br>• கடன் ஒப்பந்தமானது 2009.09.28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருப்பதோடு அது 2010.04.09 ஆம் திகதி அமுலுக்கு (Effective) வந்ததாகவும்,<br><br>வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் க.அ தெரிவித்தார்.<br><br>கருத்திட்டத்தின் சிக்கலான நிலைமை மற்றும் தன்மையின் பிரகாரம், 2023.06.30 ஆம் திகதியாகின்ற போது 05 நீடிப்புக்களோடு (Extension) இத்திட்டம் |

| | | |
|---|---|---|
| | | முன்னெடுக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. |
| 02 | **<u>பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் காணப்படும் சிவில் ஒப்பந்தங்கள் குறித்த தகவல்கள்.</u>** | பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் 04 சிவில் ஒப்பந்தங்கள் காணப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் க.அ தெரிவித்தார்.<br><br>கொழும்பு கழிவகற்றல் குழாய்க் கட்டமைப்பானது வடக்குக் கட்டமைப்பு மற்றும் தெற்குக் கட்டமைப்பு என்பதாக பிரதானமாக 02 பகுதிகளைக் கொண்டதாக காணப்படுவதாகவும், வடக்குக் கட்டமைப்பு முகத்துவாரத்திலிருந்தும் தெற்குக் கட்டமைப்பு வெள்ளவத்தையிலிருந்தும் கடலுக்கு வெளியேற்றப்படுவதாகவும் தெரியவந்தது.<br><br>▪ 11.63 அ.டொ.மி பெறுமதியைக் கொண்ட “Rehabilitation of Sea Outfalls” ஒப்பந்தத்தின் கீழ் முகத்துவாரம் குழாய்ப் பாதை (pipe line) மாற்றப்பட்டமை (replace) மற்றும் வெள்ளவத்தை குழாய்ப் பாதை சுத்தம் செய்யப்படட்டமை,<br>▪ 26.04 அ.டொ.மி. ஒப்பந்தப் பெறுமதியைக் கொண்ட “Rehabilitation of Gravity Sewers and Condition Assessment of Sewers” ஒப்பந்தத்தின் கீழ் கொழும்பு நகரின் கழிவகற்றல் கட்டமைப்பின் பகுதியொன்று புனரமைக்கப்பட்டுள்ளதாகவும், 125 (கி.மீ) தூரத்திற்கான சீ.சீ.டீ.வீ மதிப்பீடொன்று (CCTV Survey) மேற்கொள்ளப்பட்டதாகவும், 8.62 கி.மீ நீளமான குழாய்க் கட்டமைப்பு |

| | | |
|---|---|---|
| | | மீளப் பொருத்தப்பட்டதாகவும் மற்றும் அதன் பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும்<br>க.அ தெரிவித்தார்.<br>▪ 2.45 அ.டொ.மி பெறுமதியான “Repair of Wanathamulla Gravity Sewers” ஒப்பந்தத்தின் கீழ் வனாத்தமுல்லை சிறைச்சாலையில் சிக்கல் நிலைமை காரணமாக 2 கி.மீ நீளமான குழாய்ப் பாதை மீளப் பொருத்தப்பட்டதாக தெரியவந்தது.<br>▪ 2023.06.21 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடிய கொழும்பு மாநகர சபையின் கழிவகற்றல் கட்டமைப்புடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான பெண் கைதிகளின் வதிவிடக் கட்டிடத்தின் கழிவகற்றல் கட்டமைப்பை சுத்திகரிக்கும் பணியானது புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத நிர்மாணிப்புக்கள் காரணமாக மேற்கொள்ள முடியாமற் போனமை குறித்து கலந்துரையாடப்பட்டது. இங்கு Zoom தொழில்நுட்பத்தினூடாக கூட்டத்தில் தொடர்புகொண்ட புகையிரதத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் இறுதி நடவடிக்கையாக அடையாளம் காணப்பட்ட மூன்று சட்டவிரோதக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றில் 03 வழக்குகளை தாக்கல் |

| | | |
|---|---|---|
| | | செய்திருப்பதாகவும், அவ்வழக்குகள் 2024.03.22 ஆம் திகதி மீள அழைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.<br><br>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>• மேற்படி சட்டவிரோதக் குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கு கொழும்பு மாநகர சபையின் மூலம் சோலை வரி இலக்கம் வழங்கப்பட்டுள்ளமையானது சிக்கலுக்குரியது என குழு வலியுறுத்தியது.<br>• மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நீர் வழிந்தோடுதல் மற்றும் அனுமதியற்ற நிர்மாணங்களை முற்றாக அகற்றுவதற்கு கொழும்பு மாநகர சபைக்கு அதிகாரம் உள்ளதால் இது தொடர்பில் மாநகர சபை சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டுமென கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.<br>• இச்சட்டவிரோத குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு முடியுமான மாற்று வழிமுறைகள் குறித்தும் ஆராய்ந்து பார்க்குமாறு குழு க.அ. இற்கு ஆலோசனைகளை வழங்கியது.<br>• கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் (DCC) மூலமாகவும் இது தொடர்பில் நடைமுறை ரீதியான தலையீட்டினை மேற்கொள்ள முடியும் என்பதாக தவிசாளர் சுட்டிக்காட்டினார். |

| | | |
|---|---|---|
| | | ▪ கொழும்பு மாநகர சபையின் 8 நீரேற்று நிலையங்களை (Pumping Stations) புனரமைப்பதற்கும் மற்றும் 02 Force Mains களை மீண்டும் பயன்படுத்துவது தொடர்பில் 57.12 அ.டொ.மி பெறுமதியான கருத்திட்டத்தின் பணிகள் நிறவுசெய்யப்படவில்லை என குழுவின் முன் தெரியவந்தது. அந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள இந்திய நிறுவனம் அதன் பணிகளை நிறைவுசெய்யாமை குறித்தும் அக்கருத்திட்டத்தின் செயற்திறனற்ற தன்மைகள் குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.<br><br>தலகொட்டுவ கார்டன் கருத்திட்டம், கிருலப்பனை பிரதேசத்தில் 02 நீரேற்று நிலையங்களை நிர்மாணிப்பதுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்துடன் தொடர்பான கருத்திட்டம் எனவும், 03 வருடங்களுக்கான அந்தக் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டதாகவும் கொழும்பு மாநகர சபையின் க.அ தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ADB) கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட கடன் 2022 ஒக்டோபர் மாதத்தில் முடிவடைந்த பின்னர் ஒப்பந்தம் நிறைவடைந்தமை தெளிவானதோடு இன்றளவில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் (ERD) மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடி அக் கருத்திட்டங்களுக்கு தேசிய நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கைகளை மேற்கொண்டு மீள ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரியவந்தது.<br><br>• "Rehabilitation of Wastewater Pumping Stations" ஒப்பந்தத்தின் 70% அளவிலான பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும், அக்கருத்திட்டத்தினுள் 8 நீரேற்று நிலையங்களை புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும், அதில் 4 நீரேற்று நிலையங்களின் பணிகளை பூர்த்திசெய்து கொழும்பு மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த ஒப்பந்தத்தினுள் உள்ளடக்கப்பட்ட கொம்பனித்தெரு நீரேற்று நிலையத்தை 2024 மே மாத இறுதியில் கொழும்பு துறைமுக நகர குழாய்ப் பாதைக்கு (port city line) தொடர்புபடுத்த எதிர்பார்ப்பதாகவும், கொழும்பு மாநகர சபையின் க.அ தெரிவித்தார்.<br><br>மேற்படி ஒப்பந்தத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவுசெய்யப்படாமல் மீதமாக உள்ள 4 நீரேற்று நிலையங்கள் குறித்து குழு வினவியது. மேற்படி நீரேற்று நிலையங்களின் பணிகளை மேற்கொள்வதற்கு அரச நிதியிலிருந்து 20 அ.டொ.மில்லியன்கள் வழங்கப்பட்டிருப்பது தெரியவந்தது.<br><br>மேற்படி ஒப்பந்தத்தினுள் உள்ளடங்கும் மாளிகாவத்தை நீரேற்று நிலையத்தின் பணிகள் நடைபெற்று வருவதாக க.அ. தெரிவித்தார். மேற்படி ஒப்பந்தத்துடன் தொடர்பான |

| | | |
|---|---|---|
| | | அமைச்சரவைத் தீர்மானத்தின் பின்னர் புதிய திருத்தமொன்றை (Contract Amendment) உள்ளடக்கிய ஒப்பந்தமானது 2024.02.21 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதாகவும் ஒப்பந்தத்தின் பணிகள் மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடுகளின் மூலம் 2025.12.31 ஆம் திகதியில் நிறைவுசெய்வதற்கான தீர்மானம் வழங்கப்பட்டுள்ளதாகவும் க.அ தெரிவித்தார்.<br><br>மேற்படி நீரேற்று நிலைய புனரமைப்புக் கருத்திட்டத்தின் செயல்திட்டம் மற்றும் (Action plan) வேலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள அந்தந்தப் பணிகளை நிறைவுசெய்வதற்கான காலப்பகுதியை உள்ளீடுசெய்யுமாறும், (Work Programme) கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கு மாதாந்தம் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை நடாத்துமாறும் (progress review meetings) மேற்படி கூட்டங்களின் கூட்டக் குறிப்புக்களின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் பிரதியொன்றுடன் குழுவிற்கும் சமர்ப்பிக்குமாறு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கொழும்பு மாநகர சபையின் கணக்கீட்டு அலுவலர் (க.அ) ஆகியோருக்கு குழு விதப்புரை செய்தது.<br>அந்த ஒப்பந்தம் தொடர்பில் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், |

| | | |
|---|---|---|
| | | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது தலைமையில் மாதாந்தம் மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படுவதாக பி.க.அ தெரிவித்தார்.<br><br>**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது PL/05/09/COPA-2024 இலக்கமுடைய மற்றும் 2024.04.19, 2024.05.13 மற்றும் 2024.10.15 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் 2024.04.02/ 2024.04.18/ 2024.09.04 ஆகிய திகதிகளில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் கூட்டக் குறிப்புக்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.(இணைப்பு I)**<br><br>**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது இலக்கம் PL/05/09/COPA-2024 உடைய 2024.06.18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் செயற்திட்டம் மற்றும் வேலைத்திட்டத்தின் மென் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** |

| | | |
|---|---|---|
| 03 | **<u>கொழும்பு நகர் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் / LED Boards காட்சிப்படுத்தலின் மூலம் வருமானமீட்டுதல்.</u>** | விளம்பரப் பலகைகளை / LED Boards காட்சிப்படுத்துவதன் மூலம் கொழும்பு மாநகர சபை ஈட்டி வரும் வருமானம் குறித்து திருப்தியடைய முடியாது என குழு வலியுறுத்தியது. விளம்பரப் பலகை காட்சிப்படுத்தலின் மூலம் 43 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டுவதாக க.அ குழுவின் முன்பாக தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| | | <u>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**</u><br><br>கொழும்பு நகர வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை காட்சிப்படுத்துவதற்காக தொடர்புடைய தனியார் நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியொன்றுடன் அதன் மூலம் பெறுகின்ற வருமானம் குறித்த அறிக்கையொன்றை குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பி.க.அ./ க.அ இற்கு குழு விதப்புரை செய்தது.<br><br>**கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளரது இலக்கம் MT/ADM/AQ/COPA/2024(I) மற்றும் 2024.07.12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேற்படி தகவல் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| **04** | <u>**கொழும்பு நகர சபை எல்லைப் பிரதேசத்தில் வாகனங்களை தரித்து வைத்தல் (Vehicle Parking)**</u> | கொழும்பு நகரில் நாளொன்றுக்கு 5000 வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு வீதியின் இருபுறங்களிலும் அடையாளம் இடப்பட்டிருப்பதாகவும், அதன் மூலம் வருமானம் பெறப்படும் வீதிகள் பத்திரிகைகள் மூலம் விலைமனுக்கள் கோரப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் க.அ தெரிவித்தார்.<br><br><u>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**</u><br><br>கொழும்பு நகரில் முறையற்ற வகையில் வாகனங்களை நிறுத்திவைப்பதன் மூலம் கடை உரிமையாளர்களுக்கு ஏற்படுகின்ற தடங்கல்களை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் இடைத்தரப்பினர்கள் முறையற்ற வகையில் இலாபங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் அவதானத்தை செலுத்திய குழு முறையான அமைப்பில் வாகனங்களை |

| | | |
|---|---|---|
| | | நிறுத்திவைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் நகர சபைக்கு குறிப்பிடத்தக்க அளவிலான இலாபங்களை பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு உள்ளடங்கலாக வாகன உரிமையாளர்களிடம் முறையற்ற வகையில் பணம் அறவிடுவதை நிறுத்தும் தேவைப்பாடுகள் குறித்தும் அவதானம் செலுத்தியது.<br><br>கொழும்பு நகரிற்குள் முறையான அமைப்பில் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் மற்றும் அதன் மூலம் பெறுகின்ற இலாபங்கள் குறித்த அறிக்கையொன்றை 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு குழு பி.க.அ / க.அ இற்கு விதப்புரை செய்தது.<br><br>**கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளரது இலக்கம் MT/ADM/AQ/ COPA/2024(I) உடைய மற்றும் 2024.07.12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கொழும்பு நகரில் ஒவ்வொரு தரிப்பிடங்களிலிருந்தும் பெறுகின்ற மாதாந்த வருமானம் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கிடைக்கும் மாதாந்த வருமானம் ரூ. 22,003,730.00 ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. .(இணைப்பு II)** |
| 05 | **<u>கொழும்பு நகரில் தோட்டங்களுக்கு அருகில் வாழும் மக்களால் முறையற்ற வகையில் அகற்றப்படும் கழிவுகள் / குப்பைகள் தொடர்பாகவும் அதற்கூடாக ஏற்படுகின்ற சூழல் பாதிப்புக்களும்.</u>** | தோட்ட மக்களால் குப்பைகள் மற்றும் மலசலகூடக் கழிவுகள் முறையற்ற வகையில் அகற்றப்படுவது தொடர்பாக அபராதம் விதிக்கும் முறை காணப்பட்டாலும் தற்போது அமுலில் உள்ள சட்டத்தின்படி அது அளவில் சிறிய தொகையை கொண்டிருப்பதாகவும் குழுவில் தெரிய வந்தது. |

| | | |
|---|---|---|
| | • முறையற்ற வகையில் கழிவுகளை அகற்றுவது தொடர்பாக அபராதம் விதிக்கும் முறை உள்ளதா என்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டம் என்னவென்றும் குழு வினவியது.<br><br>• அரசாங்கம் ரூ. 106 பில்லியன் தொகையை செலவுசெய்து நிர்மாணித்து 2019 ஏப்ரல் மாதம் செயற்படுத்திய அருவக்காரு கழிவு முனையத்தை செயற்திறன்மிக்கதாக பயன்படுத்தாமை குறித்தும் Waste to Energy கருத்திட்டம் குறித்தும் குழுக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது. | • கொழும்பு நகரில் சுமார் 1360 தோட்டக் குடியிருப்புக்கள் காணப்படுவதாகவும் அவற்றுள் 65,000 குடும்பங்கள் வசித்து வருவதாகவும்,<br>• கொழும்பு நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் பொது மக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு பொதுவான WhatsApp இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் க.அ தெரிவித்தார்.<br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>Waste to Energy கருத்திட்டத்தின் கீழ் அதிகூடிய டொன் கணக்கில் குப்பைகள் சேர்ந்த போதிலும் அக்கருத்திட்டமானது முறையான அமைப்பில் செயற்படாமையினால் எதிர்காலத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்படக்கூடும் என தெளிவுபடுத்திய குழு அதில் தலையிட்டு கருத்திட்டத்தை முறையான அமைப்பில் செயற்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பி.க.அ இற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.<br><br>• கொழும்பு நகர சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் கழிவுகள் / குப்பைகள் உள்ள இடங்களை சரியான முறையில் இனங்காண்பதற்கு WhatsApp மற்றும் முகநூல் (Facebook) ஊடாக விளம்பரங்களை காட்சிப்படுத்துவதன் மூலம் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறும்,<br>• கொழும்பு நகரில் கழிவுகளை அகற்றுதல் குறித்து கூடிய அவதானத்தையும் |

| | | |
|---|---|---|
| | | கண்காணிப்பையும் மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும்,<br>• கொழும்பு நகரில் கழிவு முகாமைத்துவம், வாகனங்களை நிறுத்துதல் மற்றும் விளம்பரப் பலகைகள் குறித்த பிரச்சினைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்,<br><br>குழுவின் மூலம் பி.க.அ./ க.அ. இற்கு விதப்புரை செய்யப்பட்டது. |
| 06 | **<u>பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட Winching Machine இயந்திரமானது நடைமுறை ரீதியில் பயன்படுத்த முடியாமல் இயங்குநிலையற்றுக் காணப்படுதல்.</u>**<br><br>கடந்த அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட இந்த விடயம் குறித்து குழு அவதானத்தை செலுத்தியது. | சிறியதொரு இயந்திரத்தால் செய்ய முடியாத குழாய்க்குள் ஏற்படுகின்ற அடைப்புக்களை (Blockages) மீள்நிலைக்கு கொண்டுவரும் தேவயேற்படுகின்ற சந்தர்ப்பங்களில் இந்த இயந்திரம் பயன்படுத்தப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>அந்த இயந்திரத்தை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்திக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு க.அ இற்கு குழு விதப்புரை செய்தது. |
| 07 | **பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டத்தின் 2ஆவது கட்டம். <u>Greater Colombo Water & Wastewater Management Improvement Investment Project - GCWWMIIP (Tranche 2&3)</u>** | • மேற்படி கருத்திட்டத்தின் 2 ஆம் பகுதியின் பெறுமதி (Tranche 2) 9 அ.டொ.மி எனவும்,<br>• அதன்கீழ் கருத்திட்டத்தின் 3 ஆம் பகுதியில் (Tranche 3) சிவில் நடவடிக்கைகளுக்கு (civil works) தேவையான நிபுணர்களை (Consultants) தெரிவுசெய்துகொள்வதற்கும் |

| | | |
|---|---|---|
| | | மற்றும் கருத்திட்டத்தின் எஞ்சிய கழிவகற்றல் திட்டத்திற்கான CCTV மதிப்பீட்டினை மேற்கொள்வதாகவும்,<br>• Tranche 3 இன் கீழ் கிருலப்பனை குழாய் நீர் வடிகாலமைப்பு ஒப்பந்தம் (Kirulapone Pipe Borne Sewer Contract) மற்றும் வெள்ளவத்தை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Wellawatta Waste Water Treatment Plant) உள்ளடக்கப்பட்டதாகவும்,<br>• வெள்ளவத்தை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும் (Terminated) அதன் வலையமைப்புப் network பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,<br>• கிருலப்பனை ஒப்பந்தம் (Kirulapone Contract) 2025.12. 31 ஆம் திகதியில் நிறைவடையவுள்ளதாகவும் மற்றும் அதன் நிர்மாணப் பணிகள் Larsen & Turbo (L & T) என்னும் ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்,<br>• அந்த ஒப்பந்தத்தின் திட்டத்தில் (design) காணப்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும் மற்றும் கொழும்பு நகர சபையின் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய நிபுணர்கள் குழுவொன்றை ஈடுபடுத்தி ஒப்பந்ததாரருடன் கலந்துரையாடி ஒப்பந்தம் குறித்த முன்மொழிவொன்றை (proposal) |

| | | |
|---|---|---|
| | | வழங்குமாறு குழு தீர்மானம் வழங்கியதாகவும்,<br>• மேற்படி நிபுணத்துவக் குழுவின் முன்மொழிவுகள் குறித்து ஒப்பந்ததாரருடனும் கலந்துரையாடலை மேற்கொண்டு 02 மாத காலத்திற்குள் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு இந்த ஒப்பந்தத்தின் பணிகளை நிறைவுசெய்ய உத்தேசித்திருப்பதாகவும், க.அ தெரிவித்தார். |
| 08 | <u>Greater Colombo Water & Wastewater Management Improvement Investment Project - GCWWMIIP (Tranche 3) கீழ் வருகின்ற ஐரோப்பிய முதலீட்டு வங்கி (European Investment bank) அன்பளிப்புச் செய்த ஐரோப்பிய கடன் உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டம்.</u> | • "Kirula and Narahenpita Sewer Network" கருத்திட்டம், இதன் கீழ் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும்,<br>• Power China Zhongnan Engineering Cooperation Ltd இற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டதாகவும்,<br>• 2023.11.29 ஆம் திகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாகவும் மற்றும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும்,<br>• 2026.06.27 ஆம் திகதியாகின்ற போது அந்தக் கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும்,<br>• ஐரோப்பிய கடன் உதவித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் "Southern Catchment Sewer Upsizing" கருத்திட்டத்திற்கு குறைந்த கூறுவிலையை சமர்ப்பித்த ஒப்பந்ததாரரில் காணப்பட்ட சிக்கல் நிலைமை காரணமாக ஒப்பந்தத்தை வழங்கவில்லை என்பதோடு மீண்டும் |

| | | |
|---|---|---|
| | | விலைமனுக்கோர உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>க.அ தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் பணிகளை கொழும்பு மாநகர சபையின் உள்ளக கணக்காய்வாளரின் கண்காணிப்புக்கு உட்படுத்துமாறு குழு பி.க.அ./ க.அ இற்கு விதப்புரை செய்ததோடு இதனோடு தொடர்புடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கருத்திட்டத்திற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள நகர சபைப் பணியாளர்களது கொடுப்பனவுகளுக்காக கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு பி.க.அ./ க.அ இற்கு அறுவுறுத்தல் வழங்கியது.<br>கொழும்பு மாநகர சபை 2024 மே மாதத்தில் மீண்டும் குழுவின் முன் அழைக்கப்படுவதாக குழு அறிவித்தது. |

**சீ ஷெல்ஸிலிருந்து தாய்லாந்து வரையில் பயணித்த, பழுதடைந்த மீன்கள் அடங்கிய கொள்கலன்களைக் கொண்ட கப்பலை கொழும்பு துறைமுகத்தினூடாக நாட்டுக்குள் வரவழைத்தமை தொடர்பில் கணக்காய்வு ஐயவினாவினூடாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை ஆராய்தல்**

**விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 மார்ச்சு 20**

**அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**

- நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
- சுற்றாடல் அமைச்சு
- இலங்கைச் சுங்கம்
- இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- பொலிஸ் திணைக்களம்

| | | |
|---|---|---|
| 01 | **களப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்படும் குழு**<br><br>2024.01.23ஆந் திகதி அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முன்னிலையில் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அழைக்கப்பட்ட வேளையில், குழுவினால் மேற்படி கணக்காய்வு ஐயவினாவிற்குரியதாக அகற்றப்பட்ட மீன் பாகங்களைப் பயன்படுத்தி பசளை தயாரிப்பினை மேற்கொள்கின்ற குறித்த தொழிற்சாலையிலிருந்து இதுவரையில் எந்தளவு பசளை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பில் களப் பரிசோதனையொன்றினை மேற்கொள்வதற்காக குழுவொன்றினை நியமிக்குமாறு வழங்கப்பட்ட விதப்புரைக்கு அமைவாக அக்குழுவை நியமிப்பது மாத்திரம் இடம்பெற்றிருந்த அதேவேளை, அவ்வாறு நியமிக்கும் பணிகளும் இக்கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்ட பிறகு ஓர் தினத்தில் இடம்பெற்றிருந்தமையை அவதானித்த குழு அத்தகைய தாமதத்திற்கான காரணங்கள், குறித்த குழுவின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தனவா என்பது தொடர்பில் ஆராய்ந்தது. | ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் குழு உறுப்பினர்களின் பெயர்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக குழுவை நியமிக்க நீண்ட காலம் எடுத்ததாகவும், இதுவரையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை எனவும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்தார்.<br><br>**களப் பரிசோதனை நடவடிக்கைக்கு நியமிக்கப்பட்ட குழு 2024.03.25, 2024.04.29 மற்றும் 2024.04.30 ஆகிய திகதிகளில் களப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு தயாரித்த இறுதி அறிக்கை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/I&E/Rotten fish/2024 இலக்க மற்றும் 2024.06.11 ஆம் திகதிய கடிதம் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| 02 | **<u>மேற்படி சம்பவம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள்</u>** | • குறித்த கப்பலில் மீன்கள் அடங்கிய 102 கொள்கலன்கள் காணப்பட்டதோடு அவற்றுள் 4 கொள்கலன்கள் Agri star Compost (Pvt) Ltd. நிறுவனத்திடம் அழிப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததாகவும் இந்த 4 கொள்கலன்களை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு போலியான சுங்கக் குறிப்புகள் (Dummy Cusdec) பயன்படுத்தப் பட்டதாகவும் குழுவின் முன்னிலையில் தெரியவந்தது.<br><br>• மத்திய சுற்றாடல் அதிகார சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மேற்படி கொள்கலன்களை அழிப்பதற்கு இணைந்துகொண்ட தரப்பினரின் (Destruction Party) அனுமதியின் மீது இந்த 4 கொள்கலன்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் அவற்றுக்குரிய அறிக்கைகள் இருப்பதாகவும்,<br><br>• Echo N Rich நிறுவனம் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்காக முன்வைத்த வேண்டுகோளுக்கமைய எஞ்சிய 98 கொள்கலன்களையும் இலங்கைச் சுங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினூடாக பரிசோதனை செய்து பார்த்ததாகவும்,<br><br>• அதன்போது அவை கழிவு மீன்கள் (fish Waste) என அடையாளம் காணப்பட்டு HS code வழங்கியதாகவும், |

| | | |
|---|---|---|
| | | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ/க.அ மேலும் தெரிவித்தார்.<br><br>• மேற்படி 102 கொள்கலன்களுள் 98இற்கு முறையான சுங்கக் குறிப்புகள் (cusdecs) பதியப்பட்டு 17 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டிந்ததுடன் அந்த கொள்கலன்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் விதமாக முற்றேதியிடப்பட்ட போலியான இன்வொய்ஸ் மற்றும் பொதியிடல் பட்டியல்கள் (Packing list) சமர்ப்பித்திருந்தமை குழுவின் முன்னிலையில் தெரியவந்தது. இவ்வாறான போலியான ஆவணங்களின் மீது குறித்த கொள்கலன்களை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கியது யாரென்பது தொடர்பில் குழு வினவியது.<br><br>• இலங்கை சுங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினூடாக குறித்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ/க.அ தெரிவித்தார்.<br><br>• குறித்த நிறுவனத்திற்கு அந்தளவு அதிகமான மீன்களைக் கொண்டு சேதனப் பசளை தயாரிக்கக் கூடிய இயலுமை உள்ளதென சான்றளித்தவர் யாரென்பது தொடர்பில் குழு வினவியது.<br><br>• இந்த 98 கொள்கலன்கள் தொடர்பில் குறித்த நிறுவனத்திடமிருந்து சேதனப் |

| | | |
|---|---|---|
| | | பசளை தயாரித்தல் செயற்பாடுகள் பற்றிய முன்மொழிவொன்றினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அது தொடர்பில் ஆராய்ந்து அனுமதி வழங்கியதாக சுற்றாடல் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்</u>**<br><br>• குறித்த நிறுவனத்திற்கு பசளை தயாரிப்பதற்கு போதுமான இயலுமை உள்ளதென சான்றிளிக்கப்பட்ட போதிலும் உண்மையில் அவ்வாறானதொரு இயலுமை இல்லையென்பதால் 43 கொள்கலன்கள் மாத்திரம் சேதனப் பசளை தயாரிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட போதிலும் 40 கொள்கலன்களை மீள்ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமை மற்றும் மேற்படி நிறுவனம் ரின்மீன் உற்பத்தியையும் செய்வதால் பழுதடைந்த இந்த மீன் தொகையை அதற்காக பயன்படுத்த அவர்களுக்கு வழங்கப்பட்டதா என்பது பிரச்சினைக்குரிய விடயமென்பதனை குழு சுட்டிக்காட்டியது.<br>• சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, பழுதடைந்த மீன்களை இலங்கைக்கு கொண்டுவர முடியாதென கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.<br><br>பழுதடைந்த மீன் (Fish Waste) என்பது இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரக் கட்டுப்பாட்டின் கீழ்வரும் ஓர் பண்டம் மாத்திரமே என்பதுடன் அது தடைசெய்யப்பட்ட ஓர் பண்டமல்ல |

| | | |
|---|---|---|
| | | எனவும் இன்வொய்ஸ், இலங்கைச் சுங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் விதப்புரை போன்ற உரிய ஆவணங்களுடன் Echo N Rich நிறுவனத்தினால் கொள்கலன்களில் காணப்பட்ட பழுதடைந்த மீன்களைப் பயன்படுத்தி சேதனப் பசளை தயாரிப்பிற்காக செய்த முறையான கோரிக்கைக்கமைய உரிய அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதாக இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்தார்.<br>மேற்படி 98 கொள்கலன்களுள் எஞ்சிய 15 கொள்கலன்களை பிறிதொரு நிறுவனம் பசளை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்கு சுகாதார அமைச்சின் விதப்புரையை எதிர்பார்த்திருப்பதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ/க.அ மேலும் தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| 03 | **<u>இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் செய்யப்பட்ட முறைப்பாடு</u>** | சிவில் பிரசையொருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாகவும், மேலும் விசாரணை நடவடிக்கைகள் அவசியமில்லையென அவர் தெரிவித்த காரணத்தால் புலனாய்வு நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.<br><br>**<u>அவதானிப்புகள்/விதப்புரைகள்</u>**<br><br>மேற்படி பிரச்சினை தொடர்பில் 2024.03.22 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக உரிய சட்டரீதியான படிமுறைகளைப் பின்பற்றி |

| | | |
|---|---|---|
| | | குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறையான முறைப்பாடொன்றினை சமர்ப்பிக்குமாறும், இந்த பிரச்சினை தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய எழுத்துமூல அறிக்கையொன்றினை 2024.03.27ஆந் திகதிக்கு முன்னதாக குழுவிடம் ஒப்படைக்குமாறும் குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ விதப்புரை செய்தது.<br><br>முறைப்பாடு கிடைக்கப்பெற்றதும் துரிதமாக (2 - 3 மாதங்களுக்குள்) விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் 2024.04.20ஆந் திகதிக்கு முன்னர் இதன் முன்னேற்றம் குறித்த அறிக்கையை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு குழு விதப்புரை செய்தது.<br><br>**சட்ட அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் சீ/139/23/சீ இலக்க மற்றும் 2024.05.31 ஆம் திகதிய கடிதம் மூலமாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் குறித்த முறைப்பாட்டினை சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு திகதியையும் நேரத்தையும் பெற்றுத் தருமாறு பணிப்பாளர் - குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**<br><br>**குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளரின் PA/DCI/V/GP/1382/ 2024 இலக்க மற்றும் 2024.07.05ஆந் திகதிய கடிதம் மூலமாக குறித்த முறைப்பாட்டினை பதிவு செய்வதற்காக 2024.06.26ஆந் திகதி** |

| | | |
|---|---|---|
| | | **குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வருகை தருமாறு தொலைபேசியூடாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**<br><br>**புலனாய்வின் முன்னேற்றம் குறித்த அறிக்கை இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை.** |
| **குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**<br><br>***குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தொடர்பில் 2020, 2021 மற்றும் 2022 ஆம் நிதியாண்டுகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கை மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகையை புலனாய்வு செய்தல்***<br><br>**விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 ஏப்பிறல் 02** | | |
| **அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**<br>❖ பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு<br>❖ குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | | |
| 01 | **<u>வருமானங்களை திரட்டிய நிதியத்திற்கு வரவு வைத்தல்</u>**<br><br>மேற்படி திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ள உணவகம், புகைப்பட அறை, சேவா பியஸ ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானம் நலன்புரிச் சங்கத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதையும், அதற்காக திறைசேரியின் அனுமதி பெறப்படவில்லை என்பதையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார். | 2007.07.22ஆம் திகதி அரசாங்க கணக்குகள் பற்றிய குழு வழங்கிய விதப்புரைக்கமைய, திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ள உணவகம், புகைப்பட அறை, சேவா பியஸ ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானத்திலிருந்து வருடாந்தம் 25% திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதாகவும், எஞ்சிய தொகை நலன்புரிச் சங்கத்தின் கணக்கில் வரவு வைக்கப்படுவதாகவும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>திணைக்களத்தின் நலன்புரி நிதியத்தை சட்டரீதியானதாக அமைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கிய குழு, மேற்படி நிதியத்திற்கு வருமானம் |

| | | |
|---|---|---|
| | | கிடைக்கின்ற விதம் தொடர்பிலான விரிவான அறிக்கையொன்றினை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு (பி.க.அ.) விதப்புரை செய்தது.<br><br>**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் 2024.05.14ஆந் திகதிய மற்றும் PS/IA/E&I/109/02/24 ஆம் இலக்க கடிதம் மூலமாக குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>**மேற்படி அறிக்கைக்கமைவாக நலன்புரி நிதியத்திற்கு வருமானம் கிடைக்கின்ற மூலங்களாவன -**<br><br>• **அங்கத்துவக் கட்டணம்**<br>• **மரண உதவிக் கட்டணம்**<br>• **சேவா பியஸ மூலமாக வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக கிடைக்கின்ற வருமானம்**<br>• **விசேட விற்பனைக் கூட வருமானம்**<br>• **உணவக இலாபம்** |
| 02 | **<u>இலத்திரனியல் கடவுச்சீட்டு (e-passport) வழங்குதல்</u>** | இலத்திரனியல் கடவுச் சீட்டினூடாக நபரொருவரின் அடையாளத்தை மிக இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியுமெனவும், விமான நிலையத்தினுள் நிலவுகின்ற நெரிசலை இதனூடாக குறைப்பதற்கும் இயலுமை கிடைக்குமெனவும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ.) தெரிவித்தார். அதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் இலத்திரனியல் கடவுச் சீட்டினை வழங்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| | | **<u>விதப்புரைகள்</u>**<br><br>இலத்திரனியல் கடவுச்சீட்டு (e-passport) வழங்குதல் தொடர்பான தற்போதைய நிலைமை மற்றும் மேற்படி செயற்பாட்டினை நிறைவு செய்தல் வரையிலான திகதிகள் அடங்கிய அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. இற்கு குழு விதப்புரை விடுத்தது.<br><br>**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் 2024.05.14ஆந் திகதிய மற்றும் PS/IA/E&I/109/02/24 ஆம் இலக்க கடிதம் மூலமாக விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>e-gates கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தாமதமடைதல்</u>**<br><br>அவசியமான உபகரங்களைக் கொள்வனவு செய்வதை மேற்கொள்ள முன்னர் பரிசோதனை செய்வதற்காக குறித்த உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துதல் தாமதமடைந்தமை தொடர்பில் குழு தமது கடுமையான அதிருப்தியை தெரிவித்தது. | குறித்த உத்தியோகத்தர் இலத்திரனியல் கடவுச் சீட்டு வழங்குவது தொடர்பான பெறுகைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தமையே குறித்த தாமதத்திற்கு காரணமெனவும், 2024 ஏப்பிறல் மாதம் நிறைவடைவதற்கு முன்னதாக உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு 2024 யூலை மாதமளவில் 4 e-gatesகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>விமான நிலையத்தில் நிலவும் நெரிசலைத் தவிர்ப்பதற்காக நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ள e-gates கருத்திட்டம் தாமதமடைவதற்கான காரணங்கள் மற்றும் கருத்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்ற திகதிகள் அடங்கிய அறிக்கையினை 2024 மே மாதம் 15ஆந் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு |

| | | |
|---|---|---|
| | | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. விதப்புரை வழங்கப்பட்டது.<br><br>**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் 2024.05.14ஆந் திகதிய மற்றும் PS/IA/E&I/109/02/24 ஆம் இலக்க கடிதம் மூலமாக உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>**உரிய அறிக்கைக்கு அமைவாக 2024.05.12ஆம் திகதி கட்டுப்பாட்டாளர் நாயகம் மற்றும் உரிய தொழில்நுட்பக் குழுவினர் E-gates மேற்பார்வையில் (Factory Acceptance Test) கலந்து கொண்டுள்ளதோடு தாமதமின்றி மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்ய முடியுமென தெரிவித்துள்ளனர்.** |
| 04 | **<u>விமான நிலையப் பணியாட்டொகுதியினரை செயற்றிறன்மிக்க வகையில் சேவையில் ஈடுபடுத்துதல்</u>**<br><br>விமான நிலையத்தினுள் நிலவும் நெறிசலைத் தவிர்ப்பது தொடர்பில் போதுமானளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது. விசேடமாக வேலைப்பளு நிறைந்த சந்தர்ப்பங்களில் கரும பீடங்கள் போதுமான அளவில் செயற்படாமையின் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாவதாக இதன்போது தெரிய வந்ததுடன், விமான நிலையப் பணியாட்டொகுதியினரை வேலை முறை (Duty Roster) அடிப்படையில் இணைப்புச் | கரும பீடங்களில் ஈடுபடுத்துவதற்கான பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாமை சிக்கலான விடயமாக இருப்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டதோடு, விமான நிலையத்திற்கான அனுமதிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் (Approved Cadre) எண்ணிக்கை 458 எனவும், அத்துடன் தற்பொழுது இருக்கின்ற 430 அலுவலர்களுள் 250 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் க.அ. தெரிவித்தார். அவர்களுள் பகல் - இரவு நேர வேலைமுறைக்கு 55பேர் என்ற வகையில் இணைப்புச் செய்யப்படுவது இதன்போது தெரிய வந்தது.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>விமானப் பயண நேர அட்டவணைக்கமைய வேலைப்பளு |

| | | |
|---|---|---|
| | செய்கின்ற விதம் தொடர்பாக குழு வினவியது. | மிகுந்த நேரங்களில் கூடுதலான உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்வது அவசியம் என்பதை சுட்டிக் காட்டிய குழு, வேலை முறை (Duty Roster) அட்டவணையைத் தயாரிக்கின்ற போது, தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற வகையில் பகல் - இரவு நேர வேலைமுறைக்கு இணையான எண்ணிக்கையைக் கொண்ட உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக விமான நிலைய பணியாட்டொகுதியினரை செயற்றிறன்மிக்க வகையில் ஈடுபடுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் உள்ளடங்கிய அறிக்கையை 2024 மே மாதம் 15ஆந் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. விதப்புரை வழங்கப்பட்டது.<br><br>**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் 2024.05.14ஆந் திகதிய மற்றும் PS/IA/E&I/109/02/24 ஆம் இலக்க கடிதம் மூலமாக உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>**அதற்கமைய, 24 மணிநேர வேலைக்கு ஆகக் குறைந்தது 133 உத்தியோகத்தர்கள் அவசியமென்ற போதிலும், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக அவ்வெண்ணிக்கையை சேவையில் ஈபடுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றதெனவும், தற்போதுள்ள உத்தியோகத்தர்களை முகாமைத்துவம் செய்து பகல் நேரத்தை விட அதிகமான தரப்பினரை இரவு சேவை முறைக்கு ஈடுபடுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| 05 | <u>**Henley Passport Indexஐ தரப்படுத்தல்**</u> | மேற்படி தரப்படுத்தலுக்கமைய இலங்கை வெளிநாட்டுக் கடவுச் சீட்டானது 83ஆவது இடத்தில் காணப்படுவதாக குழுவின் முன்னிலையில் தெரியவந்தது. இந்த தரப்படுத்தலின் போது கவனத்திற் கொள்ளப்படுகின்ற பிரதான காரணியாவது குறித்த கடவுச் சீட்டின் மூலம் வீசா இன்றி (Visa Free) பயணம் செய்யக்கூடிய நாடுகளின் எண்ணிக்கையாகும் என்பது இங்கு தெரியவந்தது. தற்பொழுது இலங்கை கடவுச் சீட்டின் மூலமாக வீசா இன்றி பயணம் செய்யக்கூடிய நாடுகளின் எண்ணிக்கை 41 எனவும், அந்த எண்ணிக்கையை மேலும் அதிகரித்துக் கொள்வதன் மூலம் இலங்கையின் வெளிநாட்டுக் கடவுச் சீட்டினை இந்த தரப்படுத்தலில் முன்னகர்த்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.<br><br><u>**விதப்புரைகள்**</u><br><br>மேற்படி தரப்படுத்தலின் ஒவ்வொரு அளவுகோல்களுக்குரியதாக, இலங்கை தற்போதுள்ள நிலைமை மற்றும் நடைமுறை நிலைமையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் உள்ளடங்கிய அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. குழு விதப்புரை விடுத்தது.<br><br>**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் 2024.05.14 ஆந் திகதிய மற்றும் PS/IA/E&I/109/02/24 ஆம் இலக்க கடிதம் மூலமாக உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>**அதற்கமைய, மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் தலைமையில் ஐவரடங்கிய** |

| | | |
|---|---|---|
| | | **குழுவொன்று 2024.05.10 ஆம் திகதி நியமிக்கப்பட்டதாகவும், குழு அறிக்கையை 4 மாத காலப்பகுதிக்குள் சமர்ப்பிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.** |
| 06 | **பிரதேச அலுவலகங்களின் நிலைமை**<br><br>வெளிநாட்டு கடவுச் சீட்டு வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களின் நிலைமை அதிருப்தியான மட்டத்தில் இருப்பதாக குழு தெரிவித்தது. | தற்பொழுது மாத்தறை, கண்டி, குருநாகல் மற்றும் வவுனியா ஆகிய நகரங்களை மையப்படுத்தி 4 பிரதேச அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த க.அ. சில பிரதேச அலுவலகங்களில் மக்களுக்கு போதுமானளவு வசதிகள் இல்லையென்பதை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார். மாத்தறை அலுவலகத்தை வசதிகளைக் கொண்ட வேறொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்காக பொருத்தமான கட்டிடம் ஒன்றினைப் பெற்றுத் தருமாறு தென் மாகாண பிரதம செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக க.அ. தெரிவித்தார். |
| 07 | **வெளிநாட்டவர்கள் இந்நாட்டில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்**<br><br>சுற்றுலா வீசா (Visit Visa) மீது இங்கு வந்து தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் சட்டத்திற்குப் புறம்பான வகையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. விசேடமாக இலங்கையின் தெற்குப் பிரதேசங்களில் இவ்வாறான சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுவதாக சுட்டிக்காட்டிய குழு, இவற்றைத் துரிதமாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் | இந்நிலைமை தொடர்பில் தமது திணைக்களம் கவனத்தைச் செலுத்தியுள்ளதாகவும், அதற்காக பிறிதான விசாரணைக் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், க.அ. தெரிவித்தார். அவ்வாறான நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டு அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். விசேடமாக ரஷ்யா மற்றும் உக்ரேன் நாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட 2 வருட வீசா சலுகையை தவறாகப் பயன்படுத்தி அவர்கள் மேலதிகமாக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் க.அ. சுட்டிக் காட்டினார். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை சுட்டிக்காட்டியது. | இதற்கு மேலதிகமாக, இத்தகைய நபர்களால் பல்வேறான நோய்கள் நாட்டுக்குள் பரவக்கூடிய ஆபத்து தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது. விசேடமாக கொழும்பு மாவட்டத்தில் தங்கியுள்ள இந்திய நாட்டவர்களால் காசநோய் பரவக்கூடிய ஆபத்து நிலவுவதாக இதன்போது தெரியவந்தது.<br><br>கணினித் தரவுக் கட்டமைப்பினூடாக அவ்வாறான நபர்களை அடையாளம் காணும் செயற்பாடுகள் இடம்பெற்ற போதிலும், பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள செல்கின்ற போது அவர்களால் வழங்கப்படும் விலாசங்களில் அவர்கள் தங்கியிருக்காமை தமது உத்தியோகத்தர்கள் முகம்கொடுக்கும் பிரதான பிரச்சினையென க.அ. தெரிவித்தார். தரவுக் கட்டமைப்பிற்கமைய இன்றளவில் வீசா இல்லாமல் இந்நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 2,400 என்பது இதன்போது தெரியவந்தது.<br><br>இத்தகைய விடயங்களைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய குழு, அதற்காக மக்களது ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தது. மக்கள் இத்தகைய விடயங்களை அறிவிப்பதற்காக துரித இலக்கமொன்றினை (Hotline) அறிமுகம் செய்தல் மற்றும் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்காக பிறிதான அலகொன்றினைத் தாபித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் குழு சுட்டிக்காட்டியது. |

| | | |
|---|---|---|
| 08 | **ஊக்கத்தொகை கொடுப்பனவை வழங்குதல்**<br>விமான நிலைய ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற ஊக்கத்தொகை கொடுப்பனவானது பொதுத்திறைசேரியின் அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஏற்புடைய சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவ்வாறான அனுமதி பெறப்பட்டது தொடர்பில் அவதானிக்கப்படவில்லை என கணக்காவாளர் தலைமை அதிபதி குறிப்பிட்டார். | இதற்காக தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட வேண்டி இருப்பினும் தற்போது தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருப்பதனால், இது தொடர்பாக பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் கீழ் ஏற்புடைய அனுமதிக்காக நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டு அலுவலர் குறிப்பிட்டார்.<br>**விதப்புரைகள்**<br>தற்போது காணப்படும் ஊக்கத்தொகை கொடுப்பனவு முறை பற்றிய தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்றினை 2024 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு விதந்துரைக்கப்பட்டது.<br>**PS/IA/E&I/109/02/24 இலக்கமுடைய 2024.05.14 ஆம் திகதிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலமாக விரிவான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 09 | **2017ஆம் ஆண்டிலிருந்து 62 CCTV கமராக்களை பாவனைக்கு எடுக்காது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்** | இந்த கொள்வனவு நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், குறித்த கொள்வனவுகளுடன் தொடர்புடைய அலுவலர்கள் எவரும் தற்போது திணைக்களத்தில் இல்லை எனவும், மேற்படி கமராக்கள் திணைக்களத்தின் உள் வளாகத்தில் |

| | | |
|---|---|---|
| | ரூ. இரண்டு மில்லியனுக்கும் அதிகமான பெறுமதி உடைய 62 CCTV கமராக்களை கொள்வனவு செய்து 06 வருடங்களாக பொருத்தப்படாமல் வைத்திருப்பதற்கான காரணங்கள் யாவை என குழு வினவியது. | பொருத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும், இந்த தொகுதியை பூரணப்படுத்துவதற்காக மேலும் சில உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் இவ்வருடத்தில் செய்யப்பட்டிருப்பதாகவும் கணக்கீட்டு அலுவலர் குறிப்பிட்டார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>06 வருடங்களாக 62 CCTV கமராக்களை பயன்பாட்டிற்கு எடுக்காது களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை தொடர்பாக கடும் அதிருப்தியை வெளிப்படுத்திய குழு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் தகவல் தொழில்நுட்ப பிரிவின் அலுவலர்களை உள்வாங்கிய குழுவொன்றை நியமித்து மேற்படி கமராக்களை பொருத்துவது தொடர்பான திட்டமொன்றைத் தயாரித்து, குறித்த திட்டத்துக்கு அமைவாக மேலும் தேவையான உபகரணங்கள் யாவை என தேடி அறிந்து, மேற்படி கமராக்களை பொருத்தி முடிவுறுத்தும் காலப்பகுதியினை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றினை 2024 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்கெடுப்பு அலுவலருக்கு விதந்துரைக்கப்பட்டது.<br><br>**PS/IA/E&I/109/02/24 இலக்கமுடைய 2024.05.14 ஆம் திகதிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலமாக விரிவான** |

| | | |
|---|---|---|
| | | **அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 10 | **<u>வெற்று கடவுச்சீட்டுக்களை ஒரே நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்தல்</u>**<br>குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் 21 வருடங்களாக விலைமனு கோரப்படாமல் ஒரே நிறுவனத்திடமிருந்து வெற்று கடவுச்சீட்டுக்கள் பெறப்படுவதாக குழு வலியுறுத்தியது.<br><br>அவ்வாறு, வெற்று கடவுச்சீட்டுக்களின் தேவைப்பாட்டினை கருத்திற் கொள்ளாது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த கொள்வனவானது கடவுச்சீட்டு வழங்குவதற்கு ஏற்பபட்டுள்ள தாமதத்துக்கும் காரணமாக அமைந்துள்ளதாக குழுவில் வெளிப்படுத்தபட்டது. | விலைமனு கோரப்பட்டு புதிய விநியோகஸ்தர் ஒருவரை தெரிவு செய்து கொள்ள பல்வேறு சந்தர்ப்பங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் விலைமனு கோரல் நடபடிமுறையை நடைமுறைப்படுத்துவதில் தோன்றிய சிற்சில விடயங்கள் காரணமாக அம்முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என கணக்கீட்டு அலுவலர் குறிப்பிட்டார்.<br><br>இதுவரையில் 5 மில்லியன் வெற்று கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்குத் தேவையான பெறுகைத் திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தி உள்ளதாகவும் கணக்கீட்டு அலுவலர் மேலும் குறிப்பிட்டார். |
| 11 | **<u>கடவுச்சீட்டு கட்டணத்தை திருத்தம் செய்தல்</u>**<br><br>2024 பெப்ரவரி 01 ஆம் திகதியிலிருந்து சாதாரண சேவையின் கீழ் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு கட்டணம் ரூ.5000/- இலிருந்து ரூ.10000/- வரையில் அதிகரிக்கும் போது சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை தொடர்பாகவும் குழுவால் அவதானிக்கப்பட்டது. | அவசியமின்றி கடவுச்சீட்டுக்களை பெற்றுகொள்வதற்காக விண்ணப்பிப்பதனை மட்டுப்படுத்துவதே கட்டண திருத்தம் மேற்கொள்வதற்கான அடிப்படை காரணமாக அமைந்ததாக பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் சுட்டி காட்டியதுடன், மேலும் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வோரில் 23% மாத்திரமே வெளிநாடுகளுக்கு பயணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டி உள்ளனர். |

| | | |
|---|---|---|
| 12 | **<u>சட்ட விரோதமாக நாட்டிற்குள் உட்பிரவேசிப்பவர்களை தடுத்து வைக்கும் இடங்கள்</u>** | இதற்காக வெலிசரை பிரதேசத்தில் 100 நபர்களுக்கான வசதிகளுடன் கூடிய நிலையம் ஒன்று பேணப்பட்டு வருவதாகவும் தற்போது றாகமை பிரதேசத்தில் 2 ஏக்கர் காணி ஒன்று பெறப்பட்டிருப்பதுடன் அங்கு சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்கீட்டு அலுவலர் குறிப்பிட்டார். |
| 13 | **<u>கட்டுனாயக்க விமான நிலையத்தில் CCTV கமராக்களை பொருத்தல்</u>** | **<u>விதப்புரைகள்</u>**<br><br>கட்டுனாயக்க விமான நிலைய முனையத்தில் பயணிகள் தகவல்களை பெற்றுக்கொள்ளும் கருமபீடங்களில் பொருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள CCTV கமரா தொகுதி பற்றிய தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்றினை 2024 மே 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு விதந்துரைக்கப்பட்டது.<br><br>**PS/IA/E&I/109/02/24 இலக்கமுடைய 2024.05.14 ஆம் திகதிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலமாக தொடர்புடைய அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>**கட்டுனாயக்க விமான நிலைய முனையத்தின் அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதனால் பயணிகள் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக CCTV பொருத்துவதற்கான அதிகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு இல்லை என** |

| | | |
|---|---|---|
| | | **மேற்படி அறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.** |
| **கல்வி அமைச்சு**<br>***(தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் (NEMIS) முன்னேற்றம் , 2022 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை)***<br>**விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி- 2024 ஏப்ரல் 24** | | |
| **அழைப்பு விடுக்கப்பட்ட நிறுவனங்கள் -**<br>❖ கல்வி அமைச்சு<br>❖ மொறட்டுவை பல்கலைக்கழகம்<br>❖ இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) | | |
| 01 | ***<u>தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினை (NEMIS) இற்றைப்படுத்தல்</u>***<br><br>*தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை* (NEMIS) தொடர்பாக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் 04 வருட காலமாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பினும் இதுரையில் சாதகமான முன்னேற்றத்தை அவதானிக்க முடியாமை பற்றி குறிப்பிட்ட குழு, முறையான தரவுத்தொகுதி காணப்படாமை காரணமாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பற்றி கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதில் பெருமளவில் சிரமங்கள் நிலவுவதாகவும் சுட்டக்காட்டியது. | • இந்த தரவுத் தொகுதியின் மூலம் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக அது தோல்வி அடைந்திருப்பதாகவும்<br><br>• கல்வி தொடர்பான தேசிய தரவுத்தளமொன்று இன்றி தீர்மானங்கள் மேற்கொள்ள முடியாமை கல்வி அமைச்சின் பெருமளவான பிரச்சனைகளுக்கு காரணமாகி இருப்பதாகவும்,<br><br>• மொறட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை டெலிகொம் நிறுவனம் உட்பட ஏற்புடைய அனைத்து நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்ப பிரிவுடனும் இணைந்து இந்த தரவுத் தொகுதியினை இற்றைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைளை மேற்கொண்டு வருவதாகவும்,<br><br>பி.க.அ. / க.அ. குறிப்பிட்டார்.<br><br>அவ்வாறே, |

| | | |
|---|---|---|
| | | • தகவல் தொகுதியொன்றை நடைறைப்படுத்தும்போது தொழில்நுட்பதிறனைப் போன்றே ஏதுவான நிருவாக செயல்முறையொன்றை பேணுவதும் அவசியமாவதாகவும்,<br><br>• மேற்படி தரவுத்தொகுதியானது கருத்திட்டம் ஒன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டமையால், குறித்த கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அதனை நிலையாக பேணிச் செல்வதற்கு முறையியலொன்று காணப்படவில்லை எனவும்,<br><br>• நிருவாக செயல்முறையின் தாமதங்கள் காரணமாக தரவுத்தொகுதியில் காணப்படும் தரவுகள் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படாமை, குறித்த NEMIS தரவுத்தொகுதி முறையான வகையில் நடைமுறைப்படுத்தப்படாமையின் மீது தாக்கம் செலுத்துவதாகவும்,<br><br>• தகவல் தொழில்நுட்ப தொகுதிகளின் மென்பொருள்கள் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுவதனால், தரவுத்தொகுதியொன்றை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு (IT infrastructure) தொடர்பான பிறிதொரு பிரிவொன்று காணப்பட வேண்டுமெனவும்,<br><br>மொறட்டுவை பல்கலைக்கழகத்தினை பிரதிநிதித்துவம் செய்த பேராசிரியர் குறிப்பிட்டார்.<br><br>இந்த தொகுதியை பேணிச்செல்வதற்குப் போதுமான |

| | | |
|---|---|---|
| | | தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் தேவையான தகைமைளைக் கொண்டுள்ள தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் தற்போது கல்வி அமைச்சிடம் இல்லை எனவும்,<br><br>நூறு திறன் வகுப்பறைகள் (Smart Classrooms) மற்றும் நூறு செயற்கை நுண்ணறிவு கூடங்களை (AI Club) நிறுவுவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் குறித்த வசதிகள் போதாமையானது தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்ட பி.க.அ./ க.அ., புதிய தரவுத்தொகுதியை நோக்கி பயணிப்பது பொருத்தமானது எனவும் குறிப்பிட்டார்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>• அரசாங்க நிறுவனங்களில் தகவல் தொகுதிகளை நிறுவும்போது குறித்த தொகுதிகளை நிலையாக பேணிச்செல்வது தொடர்பான முறையான ஆய்வறிதலை மேற்கொள்ளாமையின் காரணமாக இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுவதாக தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>• மேற்படி தரவுத்தொகுதிக்கு தேவையான வன்பொருள்கள் காணப்படாமை பற்றியும் இதுவரையில் ரூ. 125 மில்லியன் பெறுமதியான வன்பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது பற்றியும் கடந்த அரசாங்க கணக்குகள் பற்றிய குழு கூட்டத்தில் குறிப்பிடப்பட்டதாகவும்,<br><br>• சில அலுவலர்கள் தரவுத்தொகுதியினுள் |

| | | |
|---|---|---|
| | | உள்நுழைவதற்கு விரும்பாமையானது சிக்கலாகி இருப்பதாகவும், குழு சுட்டிக்காட்டியது.<br><br>மேற்படி தொகுதியினை தொடர்ந்தும் பேணிச் செல்வதா அல்லது புதிய தொகுதியொன்றை நிறுவுவதா என்பது தொடர்பாக தீர்மானித்து, அது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் பற்றி அதன் ஆரம்ப மற்றும் இறுதித் திகதிகள் உள்ளடங்கிய முழுமையான அறிக்கை ஒன்றினை 2014.05.24 ஆம் திகதியாகும் போது குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும், அது தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ<br><br>அமைச்சருடன் கலந்துரையாடி மாகாண சபை மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்துடன் (ICTA) இணைந்து குழுவொன்றை நியமித்து ஒரு வாரத்தினுள் ஏற்புடைய கலந்துரையாடல்களை/ அறிவூட்டல்களை மேற்கொண்டு தேவையின் அடிப்படையில் அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்படின், அது தொடர்பாக நடவடிக்கைளை மேற்கொள்ளுமாறும் பி.க.அ./ க.அ இற்கு குழு விதந்துரைத்தது.<br><br>**தற்போது காணப்படும் தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (NEMIS) தற்போதைய தரவு தேவைகளுக்கு பொருத்தமின்மை மற்றும் அதில் காணப்படும் தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஆகிய காரணங்களினால் எதிர்காலத்தில் பேணிச்செல்ல முடியாது எனவும்,** |

| | | |
|---|---|---|
| | | **CODEGEN சர்வதேச நிறுவனம் எதிர்வரும் 05 வருடங்கள் வரை நிறுவன சமுதாய பொறுப்புக்களை (CSR) கருத்திட்டம் ஒன்றாக எந்தவொரு கட்டண அறவீடுகளும் இன்றி, புதிய முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றாக அபிவிருத்தி செய்து கொடுப்பதற்கு இணங்கியுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளரினது ED/05/90/Audit/COPA/2024 இலக்கமுடைய 2024.05.20 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு III)** |
| 02 | **1961 இன் 08 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு கைக்கொள்ளப்பட்ட சில பாடசலைகளின் காணிகள் மற்றும் ஆதனங்கள் தொடர்பான துல்லியமான தகவல்கள் அமைச்சிடம் காணப்படாமை**<br><br>மேற்படி சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் கைக்கொண்ட பாடசாலையொன்று மூடப்பட்டின், குறித்த ஆதனத்தினை அதன் அசல் உரமையாளர்களிடம் மீள கையளிக்க வேண்டும். எனினும், மேல் மாகாணத்திற்குரிய 284 பாடசாலைகள் அவ்வாறு மீள கையளிக்கப்படாமல் இருப்பதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. | • இந்த விடயம் தொடர்பாக இதுரையில் 163 பாடசாலைகளிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும்,<br><br>• ஏற்புடைய வர்த்தமானி பத்திரத்திற்கு அமைவாக 2652 பாடசாலைகள் கைக்கொள்ளப்பட்டிருப்பினும் தேவையின் நிமித்தம் கள ஆய்வு மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும்,<br><br>• தேவையான சந்தர்ப்பங்களில் தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்திடமிருந்து நில அளவை வரைபடங்கள், காணி அளவுகள் உள்ளடங்கிய ஏனைய அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்வதாகவும்,<br><br>பி.க.அ./க.அ. குறிப்பிட்டார்.<br><br>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>• எவ்வித ஆவணமோ அல்லது உறுதியான நில அளவை |

| | | |
|---|---|---|
| | | வரைபடமோ இன்றிய ஏராளமான பாடசாலைகள் காணப்படுவதாகவும் இவ்வாறான பாடசாலைகளின் ஆதனங்கள் தொடர்பாக ஏராளமான சிக்கல்கள் காணப்படுவதாகவும்,<br><br>• எதிர்வரும் 05 வருடங்களுக்குள் மூடப்படவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஆகிய முக்கியமான புள்ளிவிபரத் தகவல்கள் கல்வி அமைச்சிடம் இல்லை எனவும்,<br><br>• கல்வி அமைச்சிடம் அனைத்து பாடசாலைகளினதும் ஆதனங்கள் தொடர்பான தகவல்கள் காணப்பட வேண்டும் எனவும்,<br><br>• ஜயவர்தனபுர கல்வி வலயத்தின் விஜேராம வித்தியாலயம் மற்றும் ஸ்டேன்லி திலகரத்ன வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக காணப்படுவதாகவும், அப்பாடசாலைகளில் பரந்தளவு காணிகள் மற்றும் ஏராளமான கட்டிடங்கள் முறையாக பயன்படுத்தப்படாது இருப்பதாகவும்,<br><br>• மோசடியான முறையில் வெளித்தரப்பினர் சில பாடசாலைகளின் ஆதனங்களை, கையகப்படுத்த முயற்சிக்கின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுவதாகவும்,<br><br>• பாடசாலைகளில் குறிப்பான தகவல்கள் காணப்படாமையின் காரணமாக மூடப்படும் பாடசாலைகளின் ஆதனங்களை ஏனைய பொதுப்பணிகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கும் நடபடிமுறைக்கு செல்வதற்கு கூட முடியாதிருப்பதனை குழு அவதானித்தது.<br><br>• 1961 இன் 08 ஆம் இலக்க உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் அரசு கைக்கொண்ட பாடசாலைகளின் ஆதனங்களை உரித்து நீக்கம் செய்யும் அதிகாரம் கல்வி அமைச்சருக்குரியது எனவும் இங்கு குறிப்பிடப்பட்டது.<br><br>1961 இன் 08 ஆம் இலக்க உதவிபெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அரசாங்கம் கைக்கொண்டுள்ள பாடசாலைகள், மேற்படி பாடசாலைகளுள் நிரல் அமைச்சிற்குரிய பாடசாலைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாகாண சபைகளுக்குரிய பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் சட்டரீதியான பின்புலம் ஆகிய தகவல்களை சேகரித்துக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கிய குழு, இந்த சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கைக்கொள்ளப்பட்டுள்ள 2652 பாடசாலைகள் தொடர்பாக மாகாண சபைகளுக்கு ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக படிவமொன்றையும் ஆலோசனை பத்திரமொன்றையும் தயாரித்து அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் வழங்கப்பட்ட விதப்புரைக்கமைவாக என குறிப்பொன்றை இட்டு மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கு அனுப்பி ஏற்புடைய தகவல்களை |

| | | |
|---|---|---|
| | | சேகரித்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.<br><br>அவ்வாறு பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம்,<br><br>- இந்த பாடசாலைகளுள் தற்போது பேணிச் செல்லப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அந்த ஒவ்வொரு பாடசாலைகளினதும் சொத்துக்கள் மற்றும் ஆதன அளவுகள்<br><br>- இதுவரை மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை, அவற்றுள் உரித்து நீக்கம் செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை<br><br>- எதிர்காலத்தில் மூடப்படவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை, அவற்றின் காணி மற்றும் கட்டிடங்கள்/ ஆதனங்கள் பற்றிய தகவல்கள் மற்றும்<br><br>- நன்கொடையளிக்கப்பட்ட ஆதனங்களின் உரிமையாளர்கள்/ நன்கொடை அளிக்கப்பட்ட தருணத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட பொறுப்பாளர்கள் மற்றும் அவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றனரா எனவும், அந்த ஆதனத்தின் தற்போதைய பொறுப்பாளர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய தொகுப்பறிக்கையொன்றைத் தயாரித்து 2024.06.15 ஆம் திகதியளவில் சமர்ப்பிக்குமாறு பி.கஅ./க.அ இற்கு குழு |

| | | |
|---|---|---|
| | | விதந்துரைத்தது. மேற்கூறப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்ளும் படிவத்தை தயாரிக்கும்போது பாடசாலைகள் பலவற்றில் கள ஆய்வினை மேற்கொள்ளலும் அதிபர்கள் சிலருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதும் பொருத்தமானது எனவும் குழு விதந்துரைத்தது.<br><br>**ED/05/69/01/01/700(பலவித) எனும் இலக்கமுடைய 2024.06.14 ஆம் திகதிய கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலம் ஏற்புடைய அறிக்கையானது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் தகவல்களை Google Sheet தரவுத்தளத்தின் ஊடாக தொடர்ச்சியாக சேகரிப்பதன் மூலம் எதிர்காலத்தில் பேணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| 03 | **<u>2008.09.18 ஆம் திகதிய 2008/37 இலக்கமுடைய சுற்றுநிரூபத்திற்கு முரணாக கல்வி அமைச்சின் கட்டமைப்புக் குழுவின் அனுமதியின்றி 29 பாடசாலைகளின் அதிபர்களால் இடைநிலை வகுப்புகளிற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பித்திருத்தல்</u>**<br><br>மேற்கூறப்பட்ட சுற்றுநிரூபத்தின் பிரகாரம் கல்வி அமைச்சின் கட்டமைப்புக் குழுவின் அனுமதியின்றி பாடசாலைகளின் சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை மாற்றம் செய்யலாகாது. எனினும், அவ்வாறு | 2022 ஆம் ஆண்டில் இந்த வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன், 06 பாடசாலைகளின் வகுப்பறைகளை அதிகரிப்பதற்காக கட்டமைப்புக் குழுவின் அனுமதியானது வழங்கப்பட்டிருப்பதாகவும், அவ்வாறு வகுப்புக்களின் எண்ணிக்கை மாற்றப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்ட ஏனைய பாடசாலைகளின் அதிபர்களிடம் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் இதுவரையில் அது தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை எனவும் பி.க.அ./ க.அ. குறிப்பிட்டார். |

| | | |
|---|---|---|
| | அனுமதியின்றி அதிபர்களின் தற்றுணிபில் 29 பாடசாலைகளின் வகுப்புக்களின் எண்ணிக்கை மாற்றப்பட்டுள்ளதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. | **<u>அதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>இந்த விடயத்துடன் தொடர்பான ஒவ்வொரு பாடசாலையினாலும் 2008/37 சுற்றுநிரூபத்திற்கு முரணாக ஆரம்பிக்கப்பட்ட வகுப்புக்களின் எண்ணிக்கை மற்றும் இது தொடர்பாக கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைமுறைகள் தொடர்பான அறிக்கையை 2024.05.17 ஆம் திகதியளவில் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/ க.அ இற்கு குழுவினால் விதந்துரைக்கப்பட்டது.<br><br>**கல்வி அமைச்சின் செயலாளரது ED/05/90/Audit/COPA/2024 இலக்கமுடைய 2024.05.20 திகதிய கடிதத்தின் மூலமாக குறித்த அறிக்கையானது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு IV)** |
| 04 | **<u>பொதுவான கடமை நேரங்களில் செயலமர்வுகளில் கலந்துகொண்டு கலந்துரையாடல் கொடுப்பனவுக்குப் பதிலாக வளவாளர் கொடுப்பனவை வழங்கியிருத்தல்.</u>**<br><br>நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் EST-EXAMS-05-1007-06 இலக்கமுடைய 2017.04.27 திகதிய கடிதத்தின் ஆலோசனைகளுக்கு முரணாக பொதுவான கடமை நேரங்களில் செயலமர்கவுகளில் கலந்துகொண்டு கலந்துகொள்ளல் கொடுப்பனவிற்குப் பதிலாக ரூ.7 இலட்சம் அளவில் வளவாளர் கொடுப்பனவை | உண்மையாக வளவாளர் கொடுப்பனவு பெற்றுக்கொண்டிருப்பது சுற்றுநிரூபங்களை தயாரித்தல், ஒன்பது மாகாணங்களின் அலுவலர்களையும் இணைத்து கொள்ள வேண்டிய அடிப்படை மட்டத்திலான தீர்மானங்களை எடுப்பதற்கான சிந்தனைக் கிளறல் அமர்வுகள் ஆகிய பொதுவான கடமைகளுக்கு அப்பாற்பட்ட நடவடிகைகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களுக்காக எனவும், எதிர்வரும் காலத்தில் வளவாளர் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பாக புதிய சுற்றுநிரூபமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பி.க.அ./ க.அ குறிப்பிட்டார்.<br><br>குழுவானது கல்வி அமைச்சின் மனிதவள அபிவிருத்தித் திட்டம் |

| | | |
|---|---|---|
| | வழங்கியமை தொடர்பாக குழு அவதானம் செலுத்தியது. | தொடர்பாக வினவியதோடு, மனிதவளப் பிரிவின் ஊடாக அனைத்து அலுவலர்களுக்கும் செயல்திறன் ஒப்பந்தங்ளையும் செயல்திறன் இலக்குளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி.க.அ./க.அ குறிப்பிட்டார். |
| 05 | **<u>பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைதல்</u>** | **<u>அவதானிப்புக்கள்/ விதப்புரைகள்</u>**<br><br>இந்த வருடத்தில் பாடசாலைகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிக்கும்போது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது மாணவர்களின் எண்ணிக்கையில் பெருமளவு வீழ்ச்சி அறிக்கையிடப்பட்டிருப்பதாகவும், கோவிட் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட நிலைமையினால் கடந்த வருடங்களில் பிறப்பு எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்ததன் காரணமாக எதிர்வரும் சில வருடங்களிலும் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களின் எண்ணிக்கை மேலும் குறைவடைய முடியும் என்பதை சுட்டிக்காட்டிய குழு, அது தொடர்பாக அனைத்து பாடசாலைகளுக்கும் மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டது.<br><br>பாடசாலைகளில் முதலாம் வகுப்பிற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக எதிர்வுகூறலொன்றை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினை குழு சுட்டிக்காட்டியதுடன், எதிர்வரும் 02 வாரத்தினுள் கடந்த 20 வருடங்களுக்கான புள்ளிவிபர தகவல்களை ஆய்வறிந்து இது தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதாக பி.க.அ./க.அ. |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிட்டார். இதற்காக முன்பள்ளிகளிலும் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைளை மேற்கொள்வதானது உகந்தது என்பது குழுவின் கருத்தாக இருந்தது. |
| 06 | **<u>தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் காணப்படுதல்</u>** | • அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளை மாத்திரம் கல்வி அமைச்சின் ஊடாக ஒழுங்குபடுத்துவதாகவும் ;<br>• கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் சர்வதேச பாடசாலைகளின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக முறையியலொன்று காணப்படவில்லை எனவும்;<br>• பதிவாளர் நாயக திணைக்களத்தின் கீழ் ஏராளமான தனியார் பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டிருப்பது கம்பனிகள் என்ற வகையிலும் அவர்களது தகவல்கள் கல்வி அமைச்சிற்கு குறிப்பிடப்படுவதில்லை எனவும்;<br>• கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் இணைந்து மேற்படி தகவல்களை பெற்றுக்கொள்ளும் முறையியலொன்றை தயாரிக்க வேண்டும் எனவும் ; மற்றும்<br>• தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளை நேரடியாக ஒழுங்குபடுத்துவதற்காக கல்வி அமைச்சிற்கு ஏற்புடைய சட்டரீதியான பின்புலத்தை நிர்மாணித்து கொடுப்பதானது அவசியமாவதாகவும்,<br><br>பீ.க.அ./ க.அ. குறிப்பிட்டார். |

| | | |
|---|---|---|
| | | **அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>• அரச சார்பற்ற பாடசாலைகள் பற்றிய ஒழுங்குபடுத்தல் முறையியல் தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட விதப்புரைகள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை,<br>• தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள் தொடர்பான முறையான கொள்கையொன்று காணப்படவில்லை,<br>• சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக பாராளுமன்ற உபகுழுவினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையின் விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை ,<br><br>என்பதையும் அவதானித்த குழு, புதிய கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக இதற்கான தீர்வொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்பது தொடர்பாகவும் விசாரித்தது.<br><br>• குறித்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதாக வும்,<br><br>• குறித்த விதப்புரைகள் 41 இல் 32 இற்கு பாராளுமன்றம் இணங்கியுள்ளதாகவும் அது தொடர்பாக மீள மதிப்பாய்வு செய்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதாகவும்,<br>• அரச சார்பற்ற பாடசாலைகளின் ஒழுங்குபடுத்தல் முறையியல் பற்றிய கணக்காய்வு அறிக்கையின் விதப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், |

| | | |
|---|---|---|
| | | • மேற்படி அறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளை மேற்பார்வை செய்தலானது பலவீனமான மட்டத்தில் காணப்படுவது தொடர்பாக 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து மேற்பார்வை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், கடந்த வருடத்தில் 24 பாடசாலைகள் மேற்பார்வை செய்யப்பட்டிருப்பதாகவும்,<br>• கம்பனிகள் சட்டம் அல்லது இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அண்ணளவான 400 ஏனைய சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குபடுத்தல் சட்டகம் மற்றும் மூலோபாயங்களை தயாரிக்குமாறு தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு 2018 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டுள்ளதாகவும்,<br>• இந்த வருடத்தின் ஏப்ரல் மாதமாகும்போது அதற்கான அளவுகோள்களைத் தயாரித்து வழங்குவதாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,<br>• பாடசாலைகள் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிதலிற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட அறிக்கையானது கடந்த வாரத்தில் வழங்கப்பட்டதாகவும்,<br>• அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் |

| | | |
|---|---|---|
| | | பாடசாலைகளினால் சுற்றுநிரூபங்களின் பிரகாரம் வருடாந்த வரவு செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அது தொடர்பாகவும் அண்மையில் கல்வி அமைச்சினால் கடிதமொன்று அனுப்பப்பட்டிருப்பதாகவும்,<br><br>• இந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் வெளிநாடு செல்லல் மற்றும் வெளிநாட்டு ஆசிரியர்களுக்கான விசாக்களை பெற்றுக்கொள்ளல் ஆகிய பணிகள் தொடர்பாகவும் சிக்கல்கள் காணப்படுவதனால், தேசிய கல்வி ஆணைக்குழுவின் அளவுகோல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி பாடசாலைகள் தொடர்பாக கல்வி அமைச்சில் பிறிதொரு பிரிவினை நிறுவுவது பொருத்தமானது எனவும்,<br><br>பி.க.அ./ க.அ. குறிப்பிட்டார்.<br><br>சர்தேச பாடசாலைகளை பொருட்கோடல் செய்வது தொடர்பாக குழுவினால் அவதானம் செலுத்தப்பட்டதுடன் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட கடிதத்திற்கு அமைவாக, சர்வதேச பாடசாலைகள் எனும் பெயரை பயன்படுத்த முடிவது “வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள்“ இற்கு மாத்திரமாவதுடன், அவ்வாறு இருப்பினும் சில தனியார் பாடசாலைகளும் சர்தேச பாடசாலைகள் எனும் பெயரை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் பி.க.அ./ க.அ. குறிப்பிட்டார். |

| | | |
|---|---|---|
| | | கல்வி அமைச்சின் அலுவலர்கள் ஏற்புடைய தகவல்கள், சுற்றுநிரூபங்கள் மற்றும் விதிகள் பற்றி இற்றைப்படுத்தி கொண்டே இருக்க வேண்டுமென குறிப்பிட்ட குழு, அதற்கான முறையியலொன்றைத் தயாரிக்குமாறு பி.க.அ/ க.அ இற்கு அறிவுரை வழங்கியது. |
| 07 | **<u>பாடசலைகளில் ஒவ்வொரு தரத்திலுமுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை வெளியிடும் பணி முறையாக இடம்பெறாமை.</u>** | **<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>பாடசலைகளில் ஒவ்வொரு தரத்திலுமுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை வெளியிடவேண்டியபோதிலும் அப்பணி முறையாக நடைபெறுவதில்லையென குழு அவதானித்தது 396 .தேசிய பாடசாலைகளினதும் தகவல்களை உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் உட்சேர்க்க நடவடிக்கை மேற்கொள்வதாக பிஅ .க/அ.க. .தெரிவித்தார்<br>வெற்றிடங்கள் தொடர்பாக , பாடசாலைகள் மூலம் கட்டமைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும் தகவல்கள் தவறாக அமையும் சந்தர்ப்பங்கள் இருப்பதாக அவதானித்த குழு ,பாடசாலைகள் மூலம் கல்வி அமைச்சுக்கு வழங்கும் தகவல்களின் துல்லியத்தை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறையொன்றைத் தயாரிப்பது பொருத்தமானதென பரிந்துரைத்தது. |
| 08 | **<u>2022 ஜூன் 6 ஆம் திகதியிட்ட ED/1/6/1/10/2022 ஆம் இலக்க தேசிய பாடசாலை பணிப்பாளரின் கடிதத்தின்படி, மாணவர்களின் குடியிருப்புக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக உட்சேர்க்கும்</u>** | அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைக்குப் புறம்பாக முதலாம், ஐந்தாம் மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிக்க முடியாத போதிலும் அரச உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களின் போது பணியின் தேவையை கருத்தில் கொண்டு இரு இடங்களுக்கிடையே உள்ள தூரத்தை |

| | | |
|---|---|---|
| | **பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை.**<br><br>மேற்படி கடிதத்தின் படி, நாட்டில் நிலவிய கடினமான சூழ்நிலை காரணமாக பொருளாதார மற்றும் போக்குவரத்து சிரமங்களினால், மாணவர்களின் குடியிருப்புக்கு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு தற்காலிகமாக சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும் தற்போது இந்த சிரமங்கள் இல்லாவிட்டாலும் அக்கடிதத்தின் படி தற்காலிகமாக அருகிலுள்ள பாடசாலையில் மாணவர்களை சேர்த்து, பின் உறுதி செய்துகொள்ளும் சந்தர்ப்பங்களும் உள்ளதாக குழுவில் தெரியவந்தது. | பொறுத்து, பிள்ளைகளின் தற்காலிக இணைப்பு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளதென்று பி அ.க/அ.க.தெரிவித்தார்.<br><br>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br>விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சருடன் கலந்துரையாடி இக்கடிதம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பி.க.அ/க.அ இற்கு.குழு பரிந்துரைத்தது. |
| 09 | **ஆசிரியர்களின் குழந்தைகளை பாடசாலைகளுக்கு சேர்க்கும் போது அவ்வாசிரியர்களின் வதிவிடத்திற்கு அமைவாக கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பணிபுரிந்த காலங்களுக்கு புள்ளிகளை வழங்கும் முறையொன்றைத் தயாரித்தல்.**<br><br>தமது வதிவிடத்திற்கு அமைவாக கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்காக சலுகை கிடைக்கும் முறையொன்றை தயாரிக்கும் தேவையைப் பற்றி குழு கவனம் செலுத்தியது. | • கஷ்டப் பிரதேச பாடசாலைகள் பற்றிய வரைவிலக்கனம் தொடர்பில்2024/01 ஆம் இலக்க சுற்றறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும்;<br>• கல்வி அமைச்சு அதற்காக தேசிய மட்டத்தில் உரிய அளவுகோல்களில் 80%ஐ உள்ளடக்கியுள்ளதுடன் மாகாண மட்டத்தில் 20% அளவுகோல்களைப் பெறுவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளதாகவும்;<br>• ஊவா, தென், வடமத்திய, வடமேல் மற்றும் வடக்கு ஆகிய மாகாணங்களில் தற்போது உரிய முறையில் அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும், சபரகமுவ மாகாணத்தின் |

| | | |
|---|---|---|
| | | அளவுகோல்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி அந்த மாகாணங்களில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஆவணங்களைத் தயாரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும்;<br>• 2025ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான புதிய சுற்றறிக்கையை தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதோடு அதில் கல்விசார் அலுவலர்கள் பிரிவின் கீழ் வசிக்கும் இடம் மற்றும் முதல் நியமனம் செய்யப்பட்ட இடத்துக்கு இடையே உள்ள தூரத்தைக் கருத்தில் கொண்டு புள்ளிகளை வழங்கும் முறையைத் தயாரிப்பதற்கு கலந்துரையாடுவதாகவும்<br>பி.அ தெரிவித்தார்.க/அ.க.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>இதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை நியமித்து முடிவெடுப்பது பொருத்தமென பரிந்துரைத்த குழு, ஆசிரியர்களின் மணக்குறைகள் பற்றி நியாயமாக நடப்பதற்காக தனிப் பிரிவொன்றை நிறுவுவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியது. |
| 10 | **<u>ஆசிரியர் ஆலோசனை சேவைகள் தொடர்பான பிரச்சினைகள்</u>** | நேர்முகப் பரீட்சைகளில் புள்ளிகளை வழங்கும் முறை பற்றி திருப்தியடைய முடியாதென இங்கு குழு தெரிவித்துள்ளது.<br><br>• இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 442 பேருக்கான நேர்முகப் பரீட்சைகளை மே மாதத்திற்குள் நடாத்தி ஜூன் |

| | | |
|---|---|---|
| | | மாதத்திற்குள் குறித்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும்; <br>• கல்வி நிர்வாகச் சேவையில் திறமை அடிப்படையில் சித்தியடைந்த 241 பேரில் 67 பேரை தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சேவைக்காலம் தொடர்பான புள்ளிகளை உள்ளிட்டு பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்; <br>• சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் கீழ் இந்த நேர்முகப் பரீட்சைகளின் புள்ளிகள் வழங்கப்படுமென்றும்; <br>• நேர்முகப் பரீட்சைகளின் போது எழக்கூடிய பிரச்சினைகளை முன்வைப்பதற்கு மேன்முறையீட்டு அதிகாரியாக கல்வியமைச்சின் செயலாளர் செயற்படுவாரென்றும், <br>பி.அ தெரிவித்தார்.க/அ.க. <br><br>இந்த சேவைகளின் பதவி உயர்வு முறை சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு உட்பட்டு செயற்படுத்தப்படுகிறதா என்பதைப் பற்றி குழு வினவியதுடன் வினைத்திறன்காண் பரீட்சைகள் முறையாக சித்தியடையாமை ஆங்கில , மொழிப் புலமை இல்லாமை போன்ற சிக்கல்களினால் பதவி உயர்வு வழங்க முடியாத நிலை உள்ளதாக பி.அ தெரிவித்தார்.க/அ.க. |
| 11 | **<u>பாடசாலைகளில் பௌதீக மற்றும் மனித வளங்களை மேம்படுத்துதல்.</u>** | **<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>** <br>பாடசாலை கட்டிடங்களைப் பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும், விளையாட்டு மற்றும் அழகியல் நடவடிக்கைகளுக்குத் தேவையான |

| | | |
|---|---|---|
| | | உபகரணங்களை பாடசாலைகளுக்கு பெற்றுக்கொள்ள முன்மொழிவுகளை வழங்குமாறும் குழு பிஅ விற்கு .க /அ.க. .அறிவுரை வழங்கியது<br><br>பாடசாலைகளுக்கு விளையாட்டு மற்றும் அழகியற்கலை ஆசிரியர்களை நியமனம் செய்வது குறித்து குழு வினவியதோடு, ஒரு பாடசாலையின் ஆரம்பப் பிரிவில்100 க்கும் மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை இருந்தால், அந்த பிரிவிற்கு அழகியற்கலை பாடத்திற்கான ஆசிரியரொருவர் அங்கீகரிக்கப்படுவாரென பிக /அ.க. .அ தெரிவித்தார்.<br><br>விளையாட்டு மற்றும் அழகியற்கலை ஆசிரியர் நியமனம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்திய குழு விளையாட்டு பாடங்களுக்கு ஆசிரிய உதவியாளர்களிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பை பாராட்டியதுடன், அழகியற்கலை பாடங்களுக்கும் ஆசிரிய உதவியாளர் நியமனம் செய்யப்பட வேண்டுமென சுட்டிக்காட்டியது.<br><br>பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடங்களின் அடிப்படையில் தீர்மாணிக்கப்படும் முறை பற்றிய அறிக்கையொன்றை 2024.05.17 ஆம் திகதிக்கு முன் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி அ விற்கு குழு.க/அ.க. பரிந்துரைத்தது.<br><br>**ஒவ்வொரு பாடத்திற்கும் இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 2021/06 இல்** |

| | | |
|---|---|---|
| | | **குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின்படி தீர்மானிக்கப்படுமென கல்வி அமைச்சின் செயலாளரின் 2024.05.20 ஆம் திகதியிடப்பட்ட ED/05/90/Audit/COPA/2024 இலக்க கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| **சுற்றுலாத்துறை அமைச்சு**<br>**(2020, 2021 மற்றும் 2022 ஆம் நிதியாண்டுகளின் அடிப்படையில் சுற்றுலாத்துறை அமைச்சு தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் தற்போதைய செயலாற்றுகையைப் பரிசோதித்தல்(**<br>**விசாரணை செய்யப்பட்ட திகதி – 2024 மே07** | | |
| **அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**<br>❖ சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு<br>❖ இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை<br>❖ இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்திப் பணியகம்<br>❖ இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்<br>❖ இலங்கை மாநாட்டுப் பணியகம்<br>❖ தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | | |
| 01 | **<u>சுற்றுலாக் கொள்கையை வர்த்தமானியில் பிரசுரிக்காமை மற்றும் சுற்றுலா மூலோபாயத் திட்டங்களை தயாரிக்காமை.</u>** | இலங்கையின் சுற்றுலாக் கொள்கை 2024 பெப்ரவரி 26ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் அது இன்னும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமை மற்றும் அதன் காரணமாக சுற்றுலா மூலோபாய திட்டங்கள் தயாரிக்கப்படாமை குறித்து குழு வினவியது.<br>அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்திய சுற்றுலாக் கொள்கையின் தமிழ் மொழிபெயர்ப்பின் சரிபார்ப்பு தற்போது நடைபெற்று வருவதாகவும் அது ,முடிந்த பிறகு சுற்றுலாக் கொள்கையை இன்னும் ஒரு வாரத்திற்குள் வர்த்தமானியில் வெளியிட முடியுமென்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் பிரதான கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| | | அலுவலர் கணக்கீட்டு அலுவலர் /(அ.க.பி) நம்பிக்கை (அ.க)தெரிவித்தார். அதேபோன்று சுற்றுலா மூலோபாயத் திட்டத்தை தயாரிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பிஅ.க /அ.க., அத்திட்டத்தைத் தயாரிக்கும்போது ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒத்துழைப்போடு நடப்பது அவசியமெனவும் தெரிவித்தார் .அந்த திட்டத்திற்குரிய நடவடிக்கைகளையும் இம்மாத இறுதிக்குள் தயாரித்து முடிக்க முடியுமென்றும் பி /அ.க.க அ. குறிப்பிட்டார். |
| 02 | **<u>சுற்றுலா அபிவிருத்திப் பகுதிகளுக்கான விதிமுறைகளைத் தயாரித்தல் மற்றும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களை அடையாளம் காணுதல்.</u>**<br><br>2005ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத் துறை சட்டத்தின்(3)26 பிரிவின் படி, சுற்றுலா அபிவிருத்திப் பகுதியொன்றில் மேற்கொள்ள முடியுமான சுற்றுலாசார் நடவடிக்கைகள், வணிகம் மற்றும் பிற செயல்பாடுகளைக் குறிப்பிட்டு கட்டளைகளை உருவாக்க முடியுமானபோதிலும் 2022 , ஆம் ஆண்டு வரை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 முக்கிய சுற்றுலா அபிவிருத்தி வலயங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டில் சுற்றுலா அபிவிருத்தி வலயங்களாக வர்த்தமானியில் | இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பி ,அ.க /அ.க.உரிய கட்டளைகளைத் தயாரிப்பதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் நிபுணத்துவ அறிவு போதுமானதாக இல்லையென்பதால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் சுற்றுலாத் துறையில் அனுபவம் மிக்க மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு கட்டளைகளைத் தயாரிக்கும் பணி தொடருமெனவும் தெரிவித்தார்.<br><br>1968ஆம் ஆண்டின் பழைய சட்டத்தின் படி சுற்றுலா வலயங்களுக்கான ஒழுங்குவிதிகளைத் தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லையென தெரிவித்த பி ஆசிய ,அ.க /அ.க.அபிவிருத்தி வங்கியுடன் முன்னோடித் திட்டமாக முதலில் 5 சுற்றுலா வலயங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கும் அதன் ,பின்னர், உள்ளூர் பொறிமுறையினூடாக ஏனைய வலயங்களுக்கான தேவையான கட்டளைகளை தயாரிக்கவும் முடியுமென ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பிரசுரிக்கப்பட்டுள்ள 17 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான கட்டளைகளைத் தயாரிப்பதற்கும் கவர்ச்சிகரமான இடங்களை அடையாளம் காண்பதற்கும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை யென குழு சுட்டிக்காட்டியது.<br><br>1987மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் சுற்றுலா வலயங்களாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட ஹிக்கடுவ மற்றும் உனவட்டுன போன்ற பிரதேசங்கள் தொடர்பில் எவ்வித ஒழுங்குவிதிகளும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என குழுவின் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. | **<u>விதப்புரைகள்</u>**<br><br>2005ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத் துறை சட்டத்தின் (3)26 பிரிவின் படி, சுற்றுலா அபிவிருத்திப் பகுதிகள் தொடர்பான கட்டளைகளைத் தயாரிப்பதற்கு பழைய சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சுற்றுலாப் பகுதிகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிடவும் கட்டளைகளைத் தயாரிக்கும் போது முன்னுரிமை அளிக்க வேண்டிய சுற்றுலா வலயங்களைக் கண்டறிந்து அது , தொடர்பான அறிக்கையை 3 மாதங்களுக்குள் 06.08.2024.08.06) ஆம் திகதிக்கு முன் (குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் சுற்றுலாத்துறை அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின்ஆம் 2024.06.05 திகதியிடப்பட்ட MT/IAI/1/4/COPA இலக்க கடிதத்தின் மூலம் அடிப்படை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்படுதல்.</u>** | அடையாளம் காணப்பட்ட 7 சுற்றுலா அபிவிருத்தி வலயங்களுக்கான பிரதான சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்துகொண்டுள்ள போதிலும் தற்போது , 02வலயங்களுக்கு) எல்ல மற்றும் ஆருகம்பொக்க (மாத்திரமே உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக குழு வெளிப்படுத்தியது.<br><br>இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து செயற்படுவதாக குறிப்பிட்ட பி ,அ.க /அ.க. |

| | | |
|---|---|---|
| | | இவ்வருடம்ஆகஸ்ட் மாதத்திற்குள் கல்பிட்டி மற்றும் ஹிக்கடுவ இரு வலயங்களுக்கான சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கும் பணி பூர்த்தி செய்யப்படுமெனவும் குறிப்பிட்டார். |
| 04 | 2024 ஆம் ஆண்டுக்காக முன்வைத்த வரவு செலவுத் திட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு குறித்து குழு வினவியது. | அதில் கருத்துத் தெரிவித்த பி.க.அ/.க.அ., இம்முறை வரவு செலவு திட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு நேரடி ஒதுக்கீட்டாக 610 மில்லியன் ரூபாய் மற்றும் கித்துல்கல மற்றும் பின்னவல சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக 750 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். அதன்படி, 610மில்லியன் ரூபாயை செலவழிக்க வேண்டிய முறை குறித்து அமைச்சின் திட்டமிடல் குழு கலந்தாலோசனை செய்து முடிவெடுப்பதாகவும், கித்துல்கலை மற்றும் பின்னவலை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு சபரகமுவ மாகாண மாவட்ட செயலாளர்களிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.<br><br>வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக வரி வருமானம் மற்றும் பிற வருமானம் மூலம் வருடாந்தம் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைக்கப்படும் தொகை அண்ணளவாக 5.7 பில்லியன் ரூபாய்) 5700 மில்லியன் ரூபாய்) ஆவதாகவும் அந்தத் ,தொகை 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத் துறை சட்டத்தின் (8)24 பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் இலங்கை , சுற்றுலா மற்றும் ஹோட்டல் |

| | | |
|---|---|---|
| | | முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை மாநாட்டுப் பணியகம் ஆகிய நான்கு நிறுவனங்களுக்கு இடையே பிரிந்து செல்வதாகவும் இங்கு தெரியவந்தது.<br><br>**விதப்புரைகள்**<br><br>2024 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி அமைச்சினால் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பாக அறிக்கையொன்றை 2 வாரங்களுக்குள் )202405.22. ஆம் திகதிக்கு முன் ( குழுவிடம் சமர்ப்பிக்குமாறு சுற்றுலாத்துறை அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின்ஆம் 2024.05.28 திகதியிடப்பட்ட MT/IAI/1/4/COPA ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 05 | **இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் சுமார் 33% வர்கள் ஒரு தடவைக்கு மேல் (Repeat Customers) இந்நாட்டிற்கு வருகை தந்தவர்களாக இருத்தல்.** | இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் சுமார் 33% ஆனவர்கள் ஒரு தடவைக்கு மேல் (Repeat Customers) இந்நாட்டிற்கு வருகை தந்தவர்களாக இருக்கின்றார்களென குழுவில் தெரிவிக்கப்பட்டபோதும்அது பற்றிய , சரியானதகவல்களைப் பெறக்கூடிய மூலாதாரங்கள் அமைச்சினால் பராமரிக்கப்படுவதில்லை என்று இங்கு தெரியவந்தது.<br><br>சுற்றுலாப் பயணிகள் பற்றிய பல தகவல்களை தமது இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றபோதிலும், |

| | | |
|---|---|---|
| | | குறித்த நபர் எத்தனையாம் தடவை இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளார் என்பது அதில் பதியப்படுவதில்லையென்றும், அந்தத் தகவல்கள் எதிர்காலத்தில் உள்ளடக்கப்பட முடியுமென்றும் பி /அ.க. .அ தெரிவித்திருந்தார்.க<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>இலங்கைக்கு தொடர்ந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின்) Repeat Customers) எண்ணிக்கை பற்றிய துல்லியமான தரவுகள் அடங்கிய அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு சுற்றுலாத்துறை அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் ஆம் திகதியிட 2024.06.05 MT/IAI/1/4/COPA ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>**புள்ளிவிபரங்களின்படி இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் கணிசமான வீதமானவர்கள் மீண்டும் இங்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**<br><br>**கணக்கெடுப்புகளின்படி, அந்தத் தொகை 2015இல் %15 மற்றும் 2018 இல் %17.2 ஆவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.** |
| 06 | **<u>2010 ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்ட கற்பிட்டியின் 6 தீவுகளின் 457.44 ஏக்கர் காணிகளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காகப்</u>** | பல்வேறு காரணங்களால் சில தீவுகளில் முதலீட்டு நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லையென குறிப்பிட்ட பி /அ.க.க ,.அ.கடலேரிக்குள் அமைந்துள்ள தீவுகள் தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லையென்றாலும், கடலில் அமைந்துள்ள தீவுகள் தொடர்பில் முதலீட்டாளர்களுக்கு பெரும் பிரச்சினை |

| | | |
|---|---|---|
| | **பயன்படுத்துவதற்காக சுமார் 10 வருடங்கள் ஆனமை மற்றும் இன்னும் 2 தீவுகளுக்குச் சொந்தமான 1388.04ஏக்கர் காணிகளை கையளித்து 13 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அக்காணிகளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாமை.** | இருப்பதாக அவர் குறிப்பிட்டார். கடலில் அமைந்துள்ள தீவொன்று தற்போது நீரில் மூழ்கியுள்ளதோடு, கடல் அரிப்பு அதிகரித்தல் காரணமாக பத்தலங்குண்டு போன்ற தீவுகளின் வடிவம் மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எனவே, அந்தத் தீவுகளில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் உள்ளதென்றும் கடலேரிக்குள் , அமைந்துள்ள 6 தீவுகளின் முதலீட்டாளர்கள் வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக ஒப்புதலுக்கு காத்திருக்கிறார்களென பி அ.க /அ.க.மேலும் குறிப்பிட்டார்.<br><br>**விதப்புரைகள்**<br><br>இலங்கை சுற்றுலா சபைக்குச் சொந்தமான தீவுகளின் முதலீட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை ஒரு மாதத்திற்குள் 2024.06.06) ஆம் திகதிக்கு முன்னர் (குழுவிடம் சமர்ப்பிக்குமாறு சுற்றுலாத்துறை அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின்ஆம் 2024.06.05 திகதியிடப்பட்டMT/IAI/1/4/COPA இலக்க கடிதத்தின் மூலம் இது பற்றிய அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது .**<br><br>**சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள 12 கற்பிட்டி தீவுகளில் 10 முதலீட்டாளர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும், இரு பெரிய தீவுகளான உச்சமுனை மற்றும் பத்தலங்குண்டு ஆகிய தீவுகளுக்கு** |

| | | |
|---|---|---|
| | | **இதுவரை முதலீட்டாளர்கள் முன்வரவில்லையெனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.** |
| 07 | **நானுஓயா புகையிரத நிலையத்தை புகையிரத மரபுரிமையாக நவீனமயமாக்கும் பணிகள்** | முழு மதிப்பீட்டுச் செலவு 74,630,924.00 ரூபாய் பெறுமதிக்கு தொல்பொருள் அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் நானுஓயா புகையிரத நிலையத்தை புகையிரத மரபுரிமையாக நவீனமயமாக்கும் பணிகள் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு , கருத்திட்டப் பணிகள்இதுவரை நிறைவு செய்யப்படாமை குறித்து குழு வினவியது.<br><br>சுற்றுலாத்துறை அமைச்சின் மூலம் இக்கருத்திட்டத்தின் பணிகளை ஆரம்பித்தபோதிலும், உரிய ஒப்பந்ததார நிறுவனத்திக்கு நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு இல்லாததால் இதன் பணிகள் தாமதமாகியதாக பிஅ /க /அ.க. இது .தெரிவித்தார்தொடர்பில் அமைச்சரவைக்கு தெரிவித்ததன் பின்னர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தின் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அமைச்சரவை பணிப்புரை வழங்கியுள்ளதுடன், அதற்கமைய இந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஆகும்போது கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்ய முடியுமென்றும் பி அ.க /அ.க.மேலும் தெரிவித்தார். |

**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

**(கணக்காய்வாளர் நாயகத்தினால் 2021 ஏப்ரல் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட பொதுநம்பிக்கை பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ள ஆதனம், மரணச்**

<table>
<tr><th colspan="3">சொத்து முகாமைத்துவம் குறித்த செயலாற்றுகை கணக்காய்வு அறிக்கையைப் பரிசோதித்தல்)<br><br>விசாரிக்கப்பட்ட திகதி – 2024 மே 08</th></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -<br>❖ புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு<br>❖ பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்</td></tr>
<tr><td>01</td><td><u>கணினிமயமாக்கப்பட்ட தரவு முறைமையொன்றை அமைப்பதற்காக 35 மில்லியன் ரூபா ஒதுக்கீடு 2024 வரவு செலவுத் திட்டத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளதால் அதன் தற்போதைய நிலை</u><br><br>கணினி மயமாக்கப்பட்ட தரவு முறைமை இல்லாத காரணத்தினால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதில் சிக்கல் நிலை காணப்படுவதாக குழு சுட்டிக்காட்டியது.</td><td>குறித்த ஒதுக்கீடு அமைச்சின் கீழுள்ள 5 நிறுவனங்களின் தரவு முறைமைகளைத் தயாரிப்பதற்கான ஒதுக்கீடென்றும், தற்போது அந்த பணிக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், உரிய நிறுவனங்களின் தேவைகளை இனங்கண்டதன் பின் அடுத்த சில வாரங்களில் விலைமனு கோரப்படுமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர்) (பிஅ.க.) தெரிவித்தார்.<br><br>அத்துடன், தற்போது திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் உள்ளடங்கிய பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு அலுவலர்களை பணியமர்த்தி நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் கணினிமயமாக்கப்படவுள்ளதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிஅ.க /அ.க. குழுவின் முன் தெரிவித்தார்.</td></tr>
<tr><td>02</td><td><u>நாடளாவிய ரீதியிலுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் சொத்துக்களை நிர்வகித்தல்</u></td><td>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி, சொத்து தொடர்பான அதிகார கையளிப்பு திணைக்களத்தின் பிரதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்களிடம் உள்ளதென்றும் அவர்கள் குறைந்தபட்சம்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு சொத்துக் கண்காணிப்பு தொடர்பாக அதிகாரம் வழங்கும் முறையியலொன்றை தயாரிப்பது குறித்து குழுவில் கலந்துரையாடப்பட்டது. | 10 வருட சேவை அனுபவமுள்ள வழக்கறிஞர்களாக இருக்க வேண்டுமென்றும் சொத்து முகாமைத்துவம் தொடர்பான நிச்சயமற்ற நிலை ஏற்பட்டால், மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடன் அது தொடர்பான அதிகாரத்தை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளதாகவும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>புதிய ஆட்சேர்ப்புகளைச் செய்ய நீண்டகாலம் தேவைப்படுவதால் கௌரவ அமைச்சருடன் கலந்துரையாடி சட்டமா அதிபரின் ஆலோசனையையும் பெற்று கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்து அல்லது மாவட்ட நீதிமன்றங்களில் உரிய அனுமதியைப் பெற்று பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆதனம், மரணச் சொத்து நிர்வாகத்தை மாவட்ட ரீதியாக மேற்கொள்வதற்கு 25 மாவட்டங்களின் மாவட்ட/பிரதேசச் செயலாளர்களை தொடர்புபடுத்தி பொருத்தமான பொறிமுறையொன்றை அவசரமாகத் தயாரிக்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் (பிஅ.க.)/ கணக்கீட்டு அலுவலருக்கு குழுவினால் (அ.க)பரிந்துரைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 03 | **<u>திணைக்களத்திடம் சொத்துகள் கிடைத்தல்</u>** | இறுதி விருப்பாவணம் மற்றும் நீதிமன்ற கட்டளைகள் மூலம் திணைக்களத்திற்கு சொத்துக்கள் பெறப்படுவதாகத் தெரிவித்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ / க.அதத்துவப் பத்திரங்கள் ,, மரணசாதண |

| | | |
|---|---|---|
| | | அதிகாரப்பத்திரங்கள் மற்றும் பாதுகாப்பு பொறுப்பாளராக நியமித்து நீதிமன்றத்தால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் சொத்துக்கள் ஒப்படைக்கப்படுவதாக குறிப்பிட்டார். இதற்காக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் போன்ற தரப்பினரின் ஒருங்கிணைப்பில் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதாகவும் குழு முன்னிலையில் அவர் மேலும் தெரிவித்தார். |
| 04 | **பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துக்கள்/ ஆதனங்களின் வகைகள் மற்றும் இலங்கை முழுவதும் அந்த வகைகளின் கீழுள்ள சொத்துக்களின் குறித்த அளவு** | சரியான தகவல் முறைமை இல்லாத காரணத்தால் சொத்து மற்றும் ஆதனங்கள் குறித்த புள்ளிவிபர தரவுகளை முன்வைப்பதில் சிரமம் இருப்பதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி அ.க /அ.க. குழு முன் தெரிவித்தார்.<br><br>**அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் பல்வேறு வகையில் சொத்துக்கள் பெறப்படும் வழிகள் யாவை மற்றும் ஒவ்வொரு சொத்தும் எப்போது பெறப்பட்டது, யாரால் கையளிக்கப்பட்டது, கையளித்தல் தொடர்பான நிபந்தனைகள் யாவை போன்ற விடயங்கள் உள்ளடங்கிய ஆவணத்தைத் தயாரிக்குமாறும்மேற்படி , தகவல்களையும் உள்ளடக்கி பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஒவ்வொரு சேவைகள் மற்றும் அச்சேவைகளின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணி பற்றி 2024 ஜூன் மாதம் 20 ஆம் திகதி அழைக்கப்படவுள்ள அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அடுத்த கூட்டத்தில் கணினி |

| | | |
|---|---|---|
| | | விளக்கக்காட்சியொன்றை) Computer Presentation) முன்வைக்குமாறும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிஅ .க /அ.க. இற்குகுழுவால் பரிந்துரைக்கப்பட்டது. |
| 05 | **<u>பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ள காணிகள்/சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதல்</u>** | திணைக்களத்தினூடாக 11 தோட்டங்கள் நிருவகிக்கப்பட்டு வருவதுடன் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் இருந்து தொடர்புடைய நம்பிக்கைப் பொறுப்பில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதாகவும் அத்துடன் நட்டமடையும் சொத்துக்களும் காணப்படுவதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார். மேற்படி நட்டமடையும் தோட்டங்கள் தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் செயலாளருடன் கலந்துரையாடி கேள்விப் பத்திரம் கோரப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்/விதப்புரைகள்</u>**<br><br>குத்தகைக்கு வழங்குவதற்கு மேலதிகமாக இராணுவ, சிவில் பாதுகாப்புப் படையணி அல்லது சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி சிப்பாய்கள் அல்லது சிறைக்கைதிகளை ஈடுபடுத்தி இந்தக் காணியை மிகவும் பயனுறுதியான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு பயன்படுத்துதல் போன்ற மாற்று வழிமுறைகள் தொடர்பாகவும் குழு சுட்டிக்காட்டியது. |
| 06 | **<u>நம்பிக்கைப் பொறுப்புக்களின் நிதி</u>** | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் 1130 நம்பிக்கைப் பொறுப்புக்கள் காணப்படுவதுடன் அவற்றில் செயற்பாட்டு நிலையில் 1100 |

| | | |
|---|---|---|
| | | காணப்படுவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார். இந்த நம்பிக்கைப் பொறுப்புகளின் நிதியானது, பிரதான மூன்று வங்கிகளில் 1936 கணக்குகளில் வைப்பில் இடப்பட்டுள்ளதுடன் அவற்றில் ரூ. 2,823 மில்லியன்கள் காணப்படுவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>இந்த நிதி குறைந்த வட்டி வீதத்தில் வைப்பில் இடப்பட்டுள்ளதாக கணக்காய்வில் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அதன் பின்னர் அரச வங்கிகளுடன் கலந்துரையாடி சாதகமான வட்டி வீதத்தில் வைப்பில் இடப்பட்டதன் மூலமாக 2023 ஆம் ஆண்டில் ரூ. 252 மில்லியன்கள் வருமானம் உழைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நிதி சம்பந்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புக்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்ததுடன் நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலும் குறித்த நிதி முதலீடு செய்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. |
| 07 | **நம்பிக்கை பொறுப்புக்களில் இருந்து கிடைத்த வாகனங்கள்** | நம்பிக்கை பொறுப்பொன்றில் இருந்து கிடைக்கப்பெற்ற வாகனம் திணைக்களத்திடம் காணப்படுவதாகவும் அதனை அந்த நம்பிக்கைப் பொறுப்பின் எதிர்பார்ப்புக்கு அமைவாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் பயன்படுத்தியுள்ளதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 08 | **காலி பத்தேகம சுது வெலிபொதவில்** | சுமார் 113 ஏக்கர் நிலப் பரப்பளவுடைய குறித்த சொத்து தொடர்ச்சியாக |

| | | |
|---|---|---|
| | **<u>அமைந்துள்ள ஹெரீ ஹப்புகொட முது சொத்தின் தற்போதைய நிலைமை</u>** | நட்டமடைந்து வரும் சொத்து என்பதால் அதனைக் குத்தகைக்கு வழங்குவதற்கு விலைமனுக் கோரப்பட்ட போதிலும் கிடைக்கப்பெற்ற கூடிய பெறுமதியுடைய கூறு விலையானது அரசாங்கத்தினால் எதிர்பார்த்த மதிப்பீட்டை விடவும் குறைந்த பெறுமதியுடையது என்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள் /விதப்புரைகள்</u>**<br><br>குத்தகை வழங்குவதற்கு மீண்டும் கேள்வி மனுவைக் கோருமாறு குழுவால் ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 09 | **<u>நம்பிக்கைப் பொறுப்புக்களின் பயனாளிகள்</u>** | நம்பிக்கைப் பொறுப்புக்களை ஒப்படைத்தவர்களின் இறுதி விருப்பின் அடிப்படையில் பணிகளை மேற்கொண்டதன் பின்னர் மிகுதியாகக் காணப்படுமாயின் நம்பிக்கைப் பொறுப்பாளரின் அங்கீகாரத்துடன் அறப் பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் பல்வேறு நம்பிக்கைப் பொறுப்புக்களில் இருந்து தொடர்ச்சியான பயன்களைப் பெறக்கூடிய பல்வேறு அறக்கட்டளை நிறுவனங்கள் காணப்படுவதாகவும் குழுவின் முன்பாக விடயங்கள் முன்வைக்கப்பட்டன. மேற்படி நம்பிக்கைப் பொறுப்புக்களில் இருந்து நிதி கிடைக்கின்றமை தொடர்பில் உரிய அறக்கட்டளை நிறுவனங்களை விழிப்பூட்டி உள்ளதாகவும் இந்தச் சொத்துக்களை ஒப்படைத்தவர்களுக்கு நன்மைகளைச் சேர்க்கும் வகையிலான செயற்பாடுகளை திணைக்களம் மேற்கொள்வதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. குழுவின் முன்பாகத் தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| 10 | **<u>வெளிநாட்டு நட்டஈட்டை உரித்தாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்</u>**<br>இலங்கையர் ஒருவர் வெளிநாட்டில் இறக்கும்போது உரித்தாளர்களுக்கு வழங்குவதற்கு கிடைக்கின்ற நட்டஈட்டுத்தொகையானது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு கிடைப்பதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. குழுவின் முன்பாகத் தெரிவித்ததுடன், தற்போது வெளிநாட்டு நட்டஈட்டுக் கணக்கில் சுமார் ரூ. 160 மில்லியன்கள் காணப்படுவதாகவும் குழுவின்போது தெரிவிக்கப்பட்டது. | இதன்பொது செலுத்தாமல் காணப்படுகின்ற நிதித் தொகை பற்றி குழு வினவியதுடன் வெளிநாட்டு நட்டஈட்டுக்குரிய உரித்தாளர்களை கண்டுபிடிப்பதற்கு பாரிய முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் உண்மையான உரித்தாளர்களை அடையாளம் காண்பதில் சிக்கல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் பணத்தைச் செலுத்தாது நிறுத்தி வைத்துள்ளதாகவும் குறிப்பிட்ட காலம் சென்றதன் பின்னர் அப்பணத்தை பொதுத் திறைசேரிக்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார்.<br><br>அதற்கமைவாக ரூ. 21 இலட்சத்துக்கு அண்மித்த நிதியை கடந்த ஆண்டில் பொதுத் திறைசேரியில் வரவு வைத்ததாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார்.<br><br>அதேபோன்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் தூதரக அலுவல்கள் பிரிவின் (Consular Affairs Division) மூலமாக இறந்த நபர் தொடர்பான தகவல்களை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதுடன் குறித்த பணத் தொகையை அதன் உரித்தாளர்களுக்கு இந்த திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொடுப்பதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>வெளிநாட்டிலுள்ள இலங்கையர் ஒருவர் இறக்கும்போது குறித்த நபர் தொடர்பான நட்டஈட்டைப் பெறுதல் தொடர்பில் தற்போது காணப்படுகின்ற சட்ட நிலைமை, அச் செயன்முறை தொடர்பில் தற்போது பின்பற்றுகின்ற முறையியல், |

| | | |
|---|---|---|
| | | மற்றும் கடந்த 5 வருட காலப்பகுதியில் நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் அவ்வாறு வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகையின் அளவு மற்றும் வெளிநாட்டு நட்டஈடு வழங்குதல் பற்றிய சுற்றறிக்கை தொடர்பான அறிக்கையொன்றை 2024 யூன் மாதம் 06 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமாக அறிவிக்குமாறும், மேற்படி விடயம் தொடர்பில் 2024 யூன் மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்து வரும் குழுக்கூட்டத்திற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவை (Consular Affairs Division) அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் குழுவின் தவிசாளரால் குழுவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.<br><br>வெளிநாட்டிலுள்ள இலங்கையர்/ஊழியர் ஒருவர் இறக்கும்போது அவரின் மரபுரிமையாளர்களுக்கு நட்டஈடு மற்றும் நிலுவைச் சம்பளதை பெற்றுக் கொடுக்கும் செயன்முறை தொடர்பாக தயாரிக்கப்பட்ட சாராம்சத்தை 2024.05.13 ஆம் திகதியளவில் குழுவிற்கு கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது. |
| 11 | **<u>விகாரைகளுக்கு நட்டஈடு வழங்குதல்</u>** | இந்த நட்டஈட்டுத்தொகை பிரதேச செயலாளர் மூலமாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு கிடைத்ததன் பின்னர் பௌத்த அலுவல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்படுகின்ற எழுத்து மூலமான அறிவித்தலின் அடிப்படையில் அந்த நிதி விடுவிக்கப்படுவதாகவும், குறித்த நிதியைப் பயன்படுத்துவதற்கான |

| | | |
|---|---|---|
| | | உரிமையானது தமது திணைக்களத்திற்குக் கிடையாது எனவும் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற குறித்த நிதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்துள்ளதுடன் அந்த வட்டித் தொகையை உரிய விகாரைகளுக்கு செலுத்துவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 417 விகாரைகளுக்கு சுமார் ரூ.1170 மில்லியன்கள் நட்டஈடு செலுத்த வேண்டியுள்ளதுடன் அவ்வாறு நட்டஈடு செலுத்த வேண்டியுள்ள விகாரைகளுக்கு ஏதேனும் மாதிரிப் படிவமொன்றைத் தயாரித்து அனுப்பிவைப்பதன் மூலமாக தேவையான தகவல்களைப் பெற்றுக்கொண்டு வழக்கு நடவடிக்கைகள்/பிரச்சினைக்குரிய விடயங்கள் இல்லாத விகாரைகளுக்குரிய நிதியை விடுவிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு அது தொடர்பான முன்னேற்றத்தை 2024 யூன் மாதம் 20 ஆம் திகதியளவில் குழுவின் முன் தெரிவிக்குமாறு குழுவால் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு விதந்துரைக்கப்பட்டது.<br><br>அதேபோன்று 417 விகாரைகளுக்கான நட்டஈடு வழங்குதல் தாமதமடைவதற்கான காரணங்கள் மற்றும் செலுத்தவேண்டியுள்ள நிதித் தொகை தொடர்பில் வகைப்படுத்தி கால அடிப்படையிலான ஆவணமொன்றைத் தயாரித்து (20 வருடங்களுக்கு மேற்பட்டவை எவ்வகையான விகாரைகள் எனும் அடிப்படையில்) குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார |

| | | |
|---|---|---|
| | | அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு விதந்துரைக்கப்பட்டது. |
| 12 | **<u>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் இணையத்தளத்தின் தகவல்களை இற்றைப்படுத்துதல்</u>** | **<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் இணையத்தளத்தில், திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற சேவைகள், தேவையான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆதனங்கள் தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கி அதனை தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடியதாக 2024 யூன் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னராக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு<br><br>புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது. |
| 13 | **<u>பொது நம்பிக்கை பொறுப்பாளரின் உடைமையில் காணப்படுகின்ற சொத்துக்களை அரசாங்கத்திற்குக் கையகப்படுத்திய சந்தர்ப்பங்களில் நட்டஈடு வழங்குதல்</u>** | வொக்ஸ்வெகன் தொழிற்சாலைக்கு மற்றும் வயம்ப பல்கலைக் கழகத்திற்கு பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் இருந்து சொத்துக்கள் கையகப்படுத்தியதாகவும் அது தொடர்பில் கிடைக்கப்பெற்ற மில்லியன் தொகையான நட்டஈட்டுத் தொகையினை வழக்கு நடவடிக்கை காரணமாக இதுவரையிலும் விடுவிக்க முடியாமல் இருப்பதால் அப்பணத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் சம்பந்தப்பட்ட காணிகளை ஒப்படைத்தவர்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவிக்கப்பட்டது. |
| **நிதி, பொருளதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**<br><br>**(நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு உட்பட இலங்கைச் சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் தொடர்பாக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைமையில் அரசாங்க நிதி பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக்** | | |

<table>
<tr><th colspan="3">குழு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு இணைந்து 2024.01.24 ஆம் திகதி குழு வழங்கிய பணிப்புரைகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்)<br><br>விசாரிக்கப்பட்ட திகதி – 2024 மே மாதம் 09 ஆம் திகதி</th></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள்<br>❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு<br>❖ இலங்கைச் சுங்கம்<br>❖ உள்நாட்டு இறைவரித் திணைக்களம்<br>❖ மதுவரித் திணைக்களம்</td></tr>
<tr><td>01</td><td><u>அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான பிரேரணையைச் சமர்ப்பித்தல்</u></td><td>இலங்கைச் சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான பிரேரணை மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான செயலாற்றுகைத் திட்டத்தை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழுவால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு (பி.க.அ.)/கணக்கீட்டு அலுவலர் (க.அ) இற்கு விதந்துரைக்கப்பட்ட போதிலும் இலங்கைச் சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியன வருமானத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் மதுவரித் திணைக்களம் வருமானத்தை அதிகரிப்பதற்கான பிரேரணையும் செயலாற்றுகைத் திட்டத்தையும் சமர்ப்பித்துள்ளமை குழுவால் அவதானிக்கப்பட்டது.<br><br>சம்பந்தப்பட்ட மூன்று நிறுவனங்களாலும் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரச நிதிக்கொள்கைத் திணைக்களம் மற்றும் வர்த்தக முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் ஆகியன வேலைத் திட்டமொன்றைத் தயார்செய்து</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | வருவதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ள செயலாற்றுகைத் திட்டங்களில் காணப்படுகின்ற முன்மொழிவுகளை தரப்பினர்களுக்கு இடையில் இணக்கப்பாட்டுடன் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ/ க.அ. குழுவிற்குத் தெரிவித்தார். |
| 02 | **<u>மதுவரித் திணைக்களத்தின் உண்மையான உற்பத்திக்குரிய வரியை உரியவாறு அறவிடுதல்</u>** | இன்றளவில் மதுவரி வருமானத்தில் இழக்கப்படும் சதவீதமானது 1% இற்கு குறைவான அளவாகும் என்றும், 99% ஆன வருமானமும் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் மதுவரி ஆணையாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்டது.<br><br>**<u>அவதானிப்புகள்</u>**<br><br>எவ்வாறாயினும் உண்மையான மதுபான உற்பத்தியின் பெறுமதியை வெளிப்படுத்தாமை (under invoice) அடிப்படையில் அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய வருமானத்தை உரியவாறு மதிப்பீடு செய்வதற்கு முடியாமல் இருப்பதாகவும், கடந்த வருடத்தை விடவும் 2024 ஆம் ஆண்டில் வருமான அதிகரிப்பொன்று காணப்பட்டமையானது அரசாங்கம் விதித்த வரி அதிகரிப்பினாலாகும் என்று குழு சுட்டிக்காட்டியது. |

| | | |
|---|---|---|
| 03 | **<u>சட்டரீதியற்ற மதுபானப் பயன்பாடு</u>**<br><br>இந்த நாட்டில் சட்டரீதியற்ற மதுபானம் எந்தளவு பயன்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றும் அத்துடன் குறித்த | இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு (WHO), மதுவரித் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகவும் நாட்டின் மதுப் பயன்பாட்டில் 30% – 35% இடைப்பட்ட அளவில் சட்டரீதியற்ற மதுபானம் பயன்படுத்துவதாக மதுவரி ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். |

| | | |
|---|---|---|
| | சட்டரீதியற்ற மதுபானப் பயன்பாட்டைக் குறைப்பதற்கு மதுவரித் திணைக்களம் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டம் பற்றியும் குழு வினவியது. | அத்துடன் மதுபானங்களின் விலை அதிகரித்தமை இதற்கான காரணமாகும் என்றும் சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளுதல் மற்றும் புதிய மதுவரி உரிமங்களை வழங்குதல் போன்ற முறைமையின் மூலமாக இந்த நிலைமையைக் குறைக்க முடியுமெனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். |
| 04 | **<u>தற்காலிக சேர் பெறுமதி அடிப்படையிலான வரி (VAT) பதிவுசெய்தல் பற்றிய தற்போதைய நிலைமை</u>** | • இது தொடர்பில் அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும்;<br>• மேற்படி குழு 08 விதப்புரைகளை வழங்கி உள்ளதாகவும் அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் திறைசேரியின் செயலாளரால் இலங்கைச் சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும்;<br>• குறிப்பிட்ட சில விதப்புரைகளை இன்றளவில் நடைமுறைப்படுத்தி உள்ளதாகவும்; மற்றும்<br>• நிரந்தர VAT வரி பதிவுள்ள தரப்பினர்களுக்கு தற்காலிக VAT இலக்கம் வழங்குவதில்லையென்றும்,<br><br>நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்/ விதப்புரைகள்</u>**<br><br>தற்காலிக VAT வரி பதிவு தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் இலங்கை சுங்கத்திற்கும் இடையில் தரவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ளக்கூடியவாறு உறுதிப்படுத்த முடியுமான QR குறியீட்டை (verifiable QR Code) |

| | | |
|---|---|---|
| | | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது பொருத்தமானதாகுமென குழுவால் முன்மொழியப்பட்டது.<br><br>தற்காலிக VAT வரி பதிவானது பல்வேறு வகையான மோசடிகளுக்கு காரணமாக இருப்பதால் அந்த நிலைமையைத் தடுப்பதற்கு தற்காலிக அடிப்படையிலான VAT வரி பதிவை இல்லாமல் செய்வதன் தேவைப்பாடு தொடர்பில் வலியுறுத்திய குழு அதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரம் உட்பட ஏனைய சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து கொள்ளுமாறும், இந்த விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் தொடர்பிலும் 2024.05.27 ஆம் திகதிக்கு முன்னராக எழுத்து மூலமான அறிக்கையொன்றைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. இற்கு விதந்துரைக்கப்பட்டது.<br><br>**இது தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுச் செயலாளரின் MF06/04/COPA ஆம் இலக்க Genera 2022 மற்றும் 2024.06.07 ஆம் திகதிய கடிதம் மற்றும் இல. MF06/04/COPA Genera 2023 – Vol-iii மற்றும் 2024.07.19 மற்றும் 2024.07.22 ஆம் திகதிய கடிதங்கள் மூலமாக அறிக்கையிடப்பட்டுள்ளன.**<br><br>இந்தக் குழுவை மீண்டும் எதிர்வரும் திகதியில் அழைப்பதால், அன்றைய திகதியில், தற்காலிக VAT வரிப் பதிவு காரணமாக ஏற்படுகின்ற சிக்கல் நிலைமையைத் தவிர்ப்பதற்காக நிகழ்நிலை (On line) நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்து (உள்நாட்டு |

| | | |
|---|---|---|
| | | இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத்திற்கு ஏற்றவாறு) அதனை செயற்படுத்துவது தொடர்பான கணினி சமர்ப்பணமொன்றைச் (Computer Presentation) சமர்ப்பிக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. இற்கு மேலும் விதந்துரைக்கப்பட்டது. |
| 05 | **அரச நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றம் மற்றும் அரச நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்தல்** | **அவதானிப்புகள்/விதப்புரைகள்**<br><br>அரச நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்தாமையால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்திய குழு, அரச நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதன் தேவைப்பாட்டை வலியுறுத்தியது. அதன்போது உரிய தரவுக் கட்டமைப்பை தயாரிப்பதற்குப் பொருத்தமான ஆட்களை/நிறுவனங்களை விளம்பரங்கள் மூலமாக தெரிவு செய்யுமாறும் உழைக்கின்ற இலாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை அவர்களின் சேவைக் கட்டணமாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் குழுவால் விதந்துரைக்கப்பட்டது.<br><br>இன்றளவில் அதற்கான முன்மொழிவுகள் (EOI- expression of interest) இனை அழைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 06 | **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பில்** | **அவதானிப்புகள்/விதப்புரைகள்**<br><br>அரசாங்கம் அறவிடக்கூடிய அரச வருமானத்தில் இன்றளவில் அறவிடப்படுவது 1/3 பகுதியாகும் என்றும், 2/3 பகுதியளவு வருமானத்தை அறவிட முடியாதுள்ளதாகச் சுட்டிக்காட்டிய குழு திரட்டக்கூடியதான |

| | | |
|---|---|---|
